Registered as a Newspaper

# உதயன்

பக்கங்கள் 12

விலை ரூ. 50

சுடர் : 38
கதிர் : 231

சனிக்கிழமை 15 ஜூலை 2023

ஆனி 30 ஆம் நாள் – வள்ளுவர் ஆண்டு 2054


சிங்களவர்களும் பொலிஸாரும் இணைந்து

# குருந்தூர்மலையில் நேற்று தமிழர்கள் மீது அட்டூழியம்!

வழிபாட்டுரிமை பொலிஸாரால் மறுப்பு

கால்களால் நசுக்கப்பட்டது கற்பூரத்தீபம்

நீதிமன்ற உத்தரவுக்கு பிக்குகள் எதிர்ப்பு



முல்லைத்தீவு, ஜூலை 15

குருந்தூர்மலை ஆதிசிவன் ஐயனார் ஆலயத்தில் பொங்கல் வழிபாட்டுக்குச் சென்ற தமிழ் மக்கள், பிக்குகள் தலைமையிலான சிங்களக் காடையர்களால் மிரட்டப்பட்டுள்ளனர். நீதிமன்ற அனுமதியைப் பெற்று பொங்கலை மேற்கொள்வதற்காகச் சென்ற தமிழர்களுக்கு எதிராக பொலிஸார் மேற்கொண்ட பலப் பிரயோகத்தால் சிலர் காயங்களுக்கும் உள்ளாகியுள்ளனர். »11

## அரசின் கொடூரமுகத்தை உலகம் உணரவேண்டும்!

குருந்தூர்மலை அட்டூழியத்துக்கு ரவிகரன் கண்டனம்



முல்லைத்தீவு, ஜூலை 15

சொந்த நாட்டில் தமிழர்களுக்கு வழிபாட்டு உரிமைகள் மறுக்கப்படும் அவலம் இன்று நிகழ்கின்றது. எத்தகைய கொடிய அரசின் கீழ் தமிழர்கள் வாழ்கின்றார்கள் என்பதை உலக நாடுகள் உணர்ந்துகொள்ளவேண்டும் என்று முன்னாள் வடமாகாணசபை உறுப்பினர் துரைராசா ரவிகரன் தெரிவித்தார். குருந்தூர்மலையில் பொலிஸாராலும், »10

## சுற்றுலாவிகளை நேற்றும் ஏமாற்றியது 'வடதாரகை'

உரிய முன்னறிவித்தல் இன்மையால் நெருக்கடியை எதிர்கொண்ட மக்கள்

யாழ்ப்பாணம், ஜூலை 15

உரிய முன்னறிவித்தலின்றி நெடுந்தீவுக்கான படகுச் சேவையின் நேரத்தை மாற்றியமைத் »11

## 10 கிலோ கஞ்சாவுடன் சிப்பாய் நேற்றுக் கைது

வவுனியா, ஜூலை 15

10 கிலோ கேரளக் கஞ்சாவுடன் வவுனியாவில் சிப்பாயொருவர் நேற்றுக் கைதுசெய்யப்பட்டுள்ளார். வவுனியா மாவட்ட குற்றத் தடுப்புப் பிரிவு அதிகாரிகள் »10

## கெஹலியவுக்கு எதிராக நாடாளுமன்றில் தீர்மானம்

ஐக்கிய மக்கள் சக்தி ஆராய்வு

கொழும்பு, ஜூலை 15

சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெலவுக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணையொன்றைக் கொண்டுவருவது »10

ஜூலை 19, 20, 21

## யாழ். பல்கலையில் பொதுப்பட்டமளிப்பு!

யாழ்ப்பாணம், ஜூலை 15

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் 37ஆவது பொதுப்பட்டமளிப்பு விழாவின் முதலாவது »10

வெளிநாட்டு வேலைவாய்ப்பு

## வடக்கு மாகாணத்துக்காக யாழில் பயிற்சி நிலையம்!

யாழ்ப்பாணம், ஜூலை 15

வடக்கு மாகாணத்திலிருந்து வெளிநாட்டு வேலைவாய்ப்புக்களுக்காகச் செல்வோருக்கான தொழிற்பயிற்சி நிலையமொன்று யாழ்ப்பாணத்தில் அமைக்கப்படவுள்ளது என்று தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு »11

வேலைவாய்ப்பு மோசடிக்குள்

## அதிகமாகச் சிக்குவது வடக்கு இளைஞர்களே!

அமைச்சர் மனுஷ கவலை

யாழ்ப்பாணம், ஜூலை 15

வெளிநாட்டு வேலைவாய்ப்பு மோசடிகளுக்குள் இலங்கையிலேயே வடக்கு மாகாண இளைஞர், யுவதிகளே அதிகளவு சிக்குகின்றனர் »11

## அரசாங்கத்தில் இருப்பதற்கு பொருத்தமற்றவரே வீரசேகர

அமைச்சர் மனுஷ தெரிவிப்பு



யாழ்ப்பாணம், ஜூலை 15

குருந்தூர்மலை விவகாரம் தொடர்பில் சரத் வீரசேகர முற்றுமுழுதாக இனவாதக் கருத்தையே வெளிப்படுத்துகின்றார். அரசாங்கத்தில் »10

## தமிழர் விவகாரத்தில் அமெரிக்கா பார்வையாளராக இருக்கக்கூடாது

தூதுவரிடம் சுட்டிக்காட்டிய சம்பந்தன்



யாழ்ப்பாணம், ஜூலை 15


தமிழர்களுக்கு எதிராக நாட்டில் அரங்கேறும் விடயங்கள் தொடர்பில் நீங்கள் மௌனமாக – பார்வையாளர்களாக இருக்கக் »11

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# குருந்தூர்மலையில் ஆலயம் அமைக்கப்போகின்றார்களாம்!

## சிங்கள மக்களை உசுப்பேத்தும் விகாராதிபதி



**முல்லைத்தீவு, ஜூலை 15**

**குருந்தூர்மலையில் பொங்கல் நிகழ்வுடன் அங்கு இந்து ஆலயத்தையும் தமிழர்கள் அமைக்க முயல்கின்றார்கள்.**

எனவே சிங்கள மக்கள் அணி திரளவேண்டும் என்று நீதிமன்ற கட்டளைகளை மீறி விகாரை கட்டுமானப் பணிகளை முன்னின்று செயற்படுத்திய வெலிஓயா சப்புமல்தன்ன விகாரை மற்றும் குருந்தூர் மலையில் சட்டவிரோதமாக அமைக்கப்பட்ட குருந்தி விகாரை ஆகியவற்றின் விகாராதிபதி கல்கமுவ சாந்தபோதி தேரர் முகநூலில் நேற்றுமுன்தினம் பதிவிட்டுள்ளார். இதற்கு அமைவாக நேற்றைய தினம் இரண்டு பேருந்துகளில் சிங்கள மக்கள் குருந்தூர்மலைக்கு அழைத்துவரப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ஒ-இ)



யாழ்.கோட்டையில்

# தொல்லியல் திணைக்கள ஆண்டு நிறைவு நிகழ்வு!

யாழ்ப்பாணம், ஜூலை 15

இலங்கைத் தொல்லியல் திணைக்களத்தின் 133 ஆவது நிறைவு நிகழ்வுகள் நேற்றுமுன்தினம் வியாழக்கிழமையும் நேற்று வெள்ளிக்கிழமையும் யாழ். கோட்டையில் இடம்பெற்றன. இதன்போது மரபுரிமை சார் விழிப்புணர்வு நடவடிக்கையாக யாழ்.பல்கலைக் கழக தொல்லியல்துறை மற்றும் கலாசார சுற்றுலாத்துறை ஆகியன இணைந்து மாணவர்களுக்கு தொல்லியல் செயற்பாடுகளில் பயன்படுத்தபடும் முறைமைகள் பற்றிய பயிற்சிகளை வழங்கின.

மேலாய்வு, மேலாய்வு ஜி.பி.எஸ். முறை, அகழ்வாய்வுக்குப் பயன்படுத்தப்படும் கருவிகள், அகழ்வாய்வு பிரயோகம் என்பவை தொடர்பிலும் விளக்கமளிக்கப்பட்டன. அத்துடன் இயற்கை விஞ்ஞானம்சார் தொல்லியல், கற்காலம் குறித்த விரிவுரைகளும் இடம்பெற்றன. ஆரம்ப நிகழ்வில் யாழ்ப்பாண மரபுரிமை மையத்தின் தலைவர் பேராசிரியர் பரமு புஷ்பரட்ணம், யாழ். பல்கலைக்கழக விஞ்ஞான பீடாதிபதி, தொல்லியல் துறை முன்னாள் பணிப்பாளர் நிமால் பெரேரா, யாழ்ப்பாண தொல்பொருள் திணைக்கள உதவிப் பணிப்பாளர் யு.எ.பந்துலஜீவ, கலாசார மத்திய நிதிய திட்ட முகாமையாளர் ஆகியோர் கலந்துகொண்டனர். (ச-125)

# சிறுமிகள் துஷ்பிரயோகம்; சந்தேகநபருக்கு மறியல்!



பலாலி, ஜூலை 15

கிறிஸ்தவ மத அமைப்பின் தனியார் முன்பள்ளியில் மாணவிகளை துஷ்பிரயோகத்துக்குட்படுத்திய குற்றச்சாட்டில் கைதுசெய்யப்பட்ட முன்பள்ளியின் முகாமையாளரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிமன்று உத்தரவிட்டுள்ளது.

பலாலி அன்ரனிபுரத்தில் தனியார் முன்பள்ளியின் முகாமையாளர். அங்கு கல்வி கற்றுவந்த தங்களைத் துஷ்பிரயோகத்துக்கு உட்படுத்தினாரென இரண்டு சிறுமிகளால் அண்மையில் முறைப்பாடு செய்யப்பட்டது. முறைப்பாட்டுக்கமைய சந்தேகநபரான குறித்த முன்பள்ளியின் 38 வயதான முகாமையாளரை கடந்த புதன்கிழமை பொலிஸார் கைதுசெய்தனர்.

சந்தேகநபர் நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை மல்லாகம் நீதிமன்றில் முற்படுத்தப்பட்ட நிலையில் எதிர்வரும் 20 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு மல்லாகம் நீதிவான் உத்தரவிட்டுள்ளார். (ச-ரி3-27)

# மகளை துஷ்பிரயோகம் செய்த தந்தைக்கு 17 ஆண்டுகள் சிறை

## *கிளிநொச்சி மேல்நீதிமன்று தீர்ப்பு*

கிளிநொச்சி, ஜூலை 15

கிளிநொச்சியில் தனது 10 வயது மகளை பாலியல் துஷ்பிரயோகம் செய்த குற்றச்சாட்டில் கைதுசெய்யப்பட்ட தந்தைக்கு 17 ஆண்டுகள் கடூழியச் சிறைத்தண்டனை விதித்து கிளிநொச்சி மேல்நீதிமன்று தீர்ப்பளித்துள்ளது. 2013 ஆம் ஆண்டு கிளிநொச்சியில் பத்துவயதுச் சிறுமியொருவரை அவரது தந்தை அடித்துத் துன்புறுத்தி பாலியல் துஷ்பிரயோகம் செய்தமை தொடர்பில் நீதிமன்றில் வழக்குத் தொடரப்பட்டது. கிளிநொச்சி மேல் நீதிமன்ற நீதிவான் ஏ.எம்.ஏ.சகாப்தீன் முன்னிலையில் இந்த வழக்கு கடந்த செவ்வாய்க்கிழமை விசாரணைக்கு எடுக்கப்பட்டது.

இதன்போது தன்னை பாலியல் துஷ்பிரயோகத்துக்குட்படுத்தினாரென சிறுமி அளித்த வாக்குமூலம், சாட்சியங்கள் மற்றும் மருத்துவ அறிக்கை என்பவற்றின் மூலம் குற்றவாளி குற்றம் புரிந்தமை நிரூபிக்கப்பட்டது. அதனையடுத்து தந்தைக்கு பதினேழு ஆண்டுகள் கடூழியச் சிறைத்தண்டனையுடன் 10 ஆயிரம் ரூபா தண்டமும் விதிக்கப்பட்டது.

தண்டப்பணம் செலுத்தத் தவறும் பட்சத்தில் 12 மாதகால சாதாரண சிறைத்தண்டனை அனுபவிக்கவேண்டும் என்றும் கிளிநொச்சி மேல் நீதிமன்று உத்தரவிட்டது. (ச-இ)



# வடமராட்சியில் வீரமக்கள் தினம்

யாழ்ப்பாணம், ஜூலை 15

ஜனநாயக மக்கள் விடுதலை முன்னணியின் வீரமக்கள் தினம் நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை வடமராட்சி இராஜ கிராமத்தில் கடைப்பிடிக்கப்பட்டது. புளொட்டின் இராஜகிராம இணைப்பாளர் சொக்கன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் மறைந்த முதல் தமிழ் எதிர்க்கட்சித் தலைவரும் நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினருமான அ.அமிர்தலிங்கத்துக்கு அஞ்சலி செலுத்தப்பட்டது. தொடர்ந்து தெரிவுசெய்யப்பட்ட முன்பள்ளி மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்களும் வழங்கி வைக்கப்பட்டன.

நிகழ்வில் புளொட்டின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமாகிய த.சித்தார்த்தன், மாகாணசபை முன்னாள் உறுப்பினர் பா.கஜதீபன் கட்சியின் ஆதரவாளர்கள் எனப் பலர் பங்கேற்றனர். (ச-ரி- 125)

# சூட்டுக்காயங்களுடன் ஆணின் சடலம் மீட்பு

கொழும்பு ஜூலை 15

அம்பாந்தோட்டை - வலஸ்முல்ல பிரதேசத்தின் வீதியோரத்தில் சூட்டுக் காயங்களுடன் ஆணொருவரின் சடலம் நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை மீட்கப்பட்டுள்ளது என்று பொலிஸார் தெரிவித்தனர்.

குறித்த நபர் அந்தப் பிரதேச மரக்கறிச் சந்தையொன்றில் உதவியாளராகப் பணியாற்றிவரும் 34 வயதுடைய இரண்டு பிள்ளைகளின் தந்தையென இனங்காணப்பட்டுள்ளார். பாதாளக் குழுக்களால் இந்தச் சம்பவம் புரியப்பட்டிருக்கலாம் எனப் பொலிஸார் சந்தேகிக்கின்றனர்.

சடலத்தை மீட்டு உடற்கூற்றுப் பரிசோதனைக்காக ஒப்படைத்த பொலிஸார், மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (ச-ரி2-22)

# சிறுவர், பெண்கள் துஷ்பிரயோகம் தடுப்பது தொடர்பில் ஆராய்வு

'சிறுவர் மற்றும் பெண்களுக்கு எதிராகப் புரியப்படும் குற்றங்களைக் கண்டித்தலும் அதற்கான தீர்வும்' என்ற தொனிப்பொருளில் கலந்துரையாடல் காங்கேசன்துறை பிராந்திய சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் சந்தன கமகே தலைமையில் தெல்லிப்பழை பிரதேச செயலகத்தில் நேற்று வெள்ளிக்கிழமை இடம்பெற்றது.

நிகழ்வில் கொழும்பு பொலிஸ் திணைக்கள சிறுவர் மற்றும் மகளிர் துஷ்பிரயோகத் தடுப்புப் பிரிவு பணியக இயக்குநர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் புத்திகமனதுங்க பிரதம விருந்தினராக பங்கேற்றார்.

இதன்போது தற்போது அதிகரித்துவரும் சிறுவர் மற்றும் பெண்கள் துஷ்பிரயோகங்கள் தொடர்பில் கேட்டறியப்பட்டதுடன் அதனைத் தடுப்பது தொடர்பில் ஆராயப்பட்டது. அத்துடன் சிறுவர்களால் மேற்கொள்ளப்படும் குற்றங்களுக்கான தண்டனைகள் மற்றும் அதற்குரிய சட்ட ஏற்பாடுகள் என்பவை தொடர்பில் விளக்கமளிக்கப்பட்டன. மேலும் பிராந்தியத்துக்குட்பட்ட பகுதிகளில் பாடசாலைகளுக்குச் செல்லாத மாணவர்கள் தொடர்பில் கவனம் செலுத்தப்பட்டுடன் அவர்களை மீளிணைப்பதற்கான தீர்வுகள் குறித்தும் சுட்டிக்காட்டப்பட்டன. காங்கேசன்துறை பிராந்திய பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பருத்தித்துறை, கரவெட்டி மற்றும் தெல்லிப்பழை ஆகிய பிரதேச செயலக சிறுவர், பெண்கள் நன்னடத்தை அதிகாரிகள் உத்தியோகத்தர்கள், பொலிஸ் உத்தியோகத்தர்கள் கலந்துரையாடலில் பங்கேற்றனர். (ச-26)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடக்கில் குண்டர்களால் பௌத்தத்துக்கு அச்சுறுத்தல்

## சரத் வீரசேகர சீற்றம்



கொழும்பு, ஜூலை 15

குண்டர்களால் பௌத்த பாரம்பரியம் எவ்வாறு அழிக்கப்பட்டுள்ளது என்பதை வடக்குக்குச் சென்று பார்க்குமாறு சிறிலங்கா பொதுஜன பெரமுனவின் நாடாளுமன்ற உறுப்பினர் சரத் வீரசேகர தெரிவித்துள்ளார்.

சரத் வீரசேகரவால் நீதித்துறைக்கு அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளதாக சட்டத்தரணிகள் சங்கம் வெளியிட்ட அறிக்கைக்குப் பதிலாக சட்டத்தரணிகள் சங்கத்தின் தலைவருக்கு அனுப்பியுள்ள கடிதத்தில் அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

அந்தக் கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

நாடாளுமன்றத்தில் நீதித்துறையை அச்சுறுத்தியதாக சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுகளை நிராகரிக்கின்றேன். நாடாளுமன்ற உறுப்பினர் என்ற ரீதியில் நாடாளுமன்றத்தில் எவ்வாறு நடந்து கொள்ள வேண்டும் என்பது எனக்கு நன்கு தெரியும்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரன் உயர்நீதிமன்றம் தொடர்பாக நாடாளுமன்றத்தில் தெரிவித்த கருத்துக்கு. அவருக்குப் பயந்தா ஆர்ப்பாட்டம் செய்யவில்லை என்றும் அவர் அந்தக் கடிதத்தில் கேள்வி எழுப்பியுள்ளார். (ஓ-22)

# மேய்ச்சலுக்கான தரவைகள் சட்டப்படி கையளிக்கப்படும்


*மன்னார் ஒருங்கிணைப்புக் குழுவில் உறுதியளிப்பு*

மன்னார், ஜூலை 15

மன்னாரில் மேய்ச்சல் நிலத்துக்கென அடையாளம் காணப்பட்ட இடங்களில் கால்நடைகள் மேய்வதற்கு வனவளத் திணைக்களம் அனுமதிக்கின்றபோதும் அந்த இடங்களை சட்டபூர்வமாக மக்களுக்குப் பெற்றுக்கொடுக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்று மன்னார் மாவட்ட ஒருங்கிணைப்புக் குழு இணைத் தலைவர் காதர் மஸ்தான் தெரிவித்துள்ளார். மன்னார் மடு பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் கடந்த செவ்வாய்க்கிழமை இடம்பெற்றது.

இதன்போது மேய்ச்சல் தரை தொடர்பில் மக்களால் கேட்கப்பட்ட இடங்களை விடுவிக்கும்படி வனவளத் திணைக்கள அதிகாரிகளிடம் ஏற்கனவே கோரப்பட்டுள்ளது எனத் தெரிவிக்கப்பட்டது. அதற்கு மேய்ச்சல் நிலத்துக்கென அடையாளம் காணப்பட்ட இடங்களில் கால்நடைகள் மேய்வதற்கு அனுமதி வழங்கியுள்ளோம் என்று வனவளத் திணைக்கள அதிகாரியொருவர் குறிப்பிட்டார்.

தற்போதுள்ள அதிகாரி சட்டபூர்வமற்ற முறையில் கால்நடை மேய்ச்சலுக்கு அனுமதிக்கின்றபோதும் பிறிதொரு அதிகாரி வந்தால் இந்த அனுமதி தடைப்படும். எனவே இந்த இடங்களை சட்டபூர்வமாக விடுவித்து அவற்றை மக்கள் பாவனைக்கு அனு மதிக்க நடவடிக்கை எடுக்கப்படும் என குழுக்கூட்டத் தலைவர் காதர் மஸ்தான் உறுதியளித்தார். (ச-60-213)



# திட்டமிடல் இன்மையால் பாலுற்பத்தி பெருவீழ்ச்சி

*மன்னார் விவசாயிகள் சுட்டிக்காட்டு*

மன்னாரில் திட்டமிடலின்றி காடுகளை அழித்து வயல் நிலங்களாக மாற்றுவதனால் கால்நடைகளின் மேய்ச்சல் நிலங்கள் அழிந்துசெல்கின்றன. அதனால் பாலின் உற்பத்தி வீழ்ச்சியுற்றுள்ளது என மன்னார் கால்நடைவளர்ப்பாளர்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

நானாட்டான் பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் இராஜாங்க அமைச்சரும், ஒருங்கிணைப்புக் குழு இணைத் தலைவருமான காதர் மஸ்தான் தலைமையில் கடந்த செவ்வாய்க்கிழமை இடம்பெற்றது.

இதன்போது, மன்னார் பெரும் நிலப்பரப்பில் விவசாயமும் கால்நடையுமே பிரதான தொழிலாகக் காணப்படுகின்றன. ஆனால் இங்கு திட்டமிடல் சரியான முறையில் மேற்கொள்ளப்படவில்லை. ஒருபுறம் விவசாயிகள் ஊக்குவிக்கப்பட்டு உப உணவுச் செய்கை விரிவுபடுத்தப்பட்டுவரும் அதேவேளை மறுபுறம் கால்நடை வளர்ப்போர் கால்நடைகளுக்கு மேய்ச்சல் நிலம் இல்லாது போகின்றமையால் கால்நடையை வளர்த்தெடுக்க அவதியுறுகின்றனர். திட்டமிடல் சரியான முறையில் மேற்கொள்ளப்படாமையாலேயே ஒரு தொழில் வளர்ச்சிப் பாதைக்கும் மறு தொழில் வீழ்ச்சிக்கும் தள்ளப்பட்டுள்ளது.

அத்துடன் மேய்ச்சல் நிலம் இல்லாத காரணத்தால் மன்னாரில் பால் உற்பத்தியும் பெரும் வீழ்ச்சி கண்டுள்ளது என்று கூட்டத்தில் சுட்டிக்காட்டப்பட்டது. (ச-60.213)

# சமூகப் பணியில் தனியொருவன்

## வடமராட்சி மக்கள் பாராட்டு

யாழ்ப்பாணம், ஜூலை 15

வடமராட்சியில் தனியொருவரால் மேற்கொள்ளப்படும் சமூகப்பணிகள் குறித்து மக்கள் மத்தியில் பாராட்டுகள் எழுந்துள்ளன.

யாழ்ப்பாணம் வடமராட்சி கிழக்கு குடத்தனை வடக்கிலிருந்து கடற்கரையிலுள்ள பிள்ளையார் ஆலயத்துக்குச் செல்வதற்கான வீதி மற்றும் அங்கிருந்து கடற்கரைக்குச் செல்வதற்கான வீதி ஆகியன தனியொருவரால் பல லட்சம் ரூபா நிதியில் அமைத்துக் கொடுக்கப்பட்டுள்ளது.

சுமார் இரண்டு கிலோமீற்றர் வரையான வீதியே 35 லட்சம் ரூபா நிதியில் புனரமைக்கப்பட்டுள்ளது.

அத்துடன் குறித்த வீதியில் நூறு வரையான சவுக்கு, இலுப்பை போன்ற மரங்கள் நடப்பட்டு அவற்றை நீர்பாய்ச்சிப் பராமரித்தும் வருகிறார்.

அதேவேளை பருத்தித்துறை பிரதேசசபையால் பொருத்தப்பட்டு சில நாள்களிலேயே செயலிழந்து போன வீதி விளக்குகளையும் சீர்செய்து கொடுத்ததுடன் 17 வீதி விளக்குகளை புதிதாக பொருத்தியும் கொடுத்துள்ளார் எனத் தெரிவிக்கப்படுகிறது. இவரது சமூகசேவைப் பணிகள் மக்கள் மத்தியில் பாராட்டைப் பெற்றுள்ளன. (ச-27)





ஒருகாலத்தில புத்தகம் வாசிக்கிறதுதான் கனபேரின்ர பொழுதுபோக்கு. ஆனால் இப்ப புத்தகங்களைக் கண்ணால காண்றதே அருமையாப் போட்டுது.எல்லாம் செல்போன் மயம். புத்தகங்களை இப்ப போனிலையே வாசிக்கிற வசதி வந்திட்டுத்தான். ஆனால் அப்பிடி போனில புத்தகம் வாசிக்கிறவையும் குறைவு. பேஸ்புக், யூரியூப், ரிக்ரொக், வட்ஸப் எண்டு ஊரிப்பட்ட அப்ஸுகள் வந்து எல்லாரையும் அதுக்குள்ள இருந்து மீளமுடியாமல் செய்து போட்டுது. முந்தின காலத்தில பொம்பிளையள் தான் குனிஞ்சதலை நிமிராமல் நடப்பினமாம். இப்ப ஆம்பிளை, பொம்பிளை எண்டில்லாமல் எல்லாரும் குனிஞ்சதலைதான். ஒருத்தரும் நிமிருறேலை. அப்பிடி நிமிர போன் விட்டாலெல்லோ?

அப்பிடி போனுக்குள்ளயே எல்லாரும் பூந்திருக்கேக்க புத்தகங்களைப் பற்றி எப்பிடி நினைப்பு வரும்? எல்லாருக்கும் இப்ப புத்தகங்கள் வேண்டாத சுமைதான். எதை அறிய வேனுமெண்டாலும் கூகிளைத் தட்டினால் எல்லாமே கொட்டுண்டுற காலத்தில, புத்தகங்கள் அலுமாரிக்குள்ள இருந்து கொட்டிலுக்க போகத் தொடங்கிட்டுதுகள். இனி 'ஏ.ஐ' ரெக்னோலோஜி வந்திட்டால் புத்தகம் துலைஞ்சமாதிரி கூகிளுக்கும் மார்க்கெட் இல்லாமல் போடும் எண்டது வேறகதை.

புத்தகங்கள் எண்டாலே எல்லாரும் பிடரியில கால்பட ஓடுற காலத்தில, புத்தகம் எழுதுறதும், அதை வெளியிடுறதும் குறைஞ்சுபோச்சுது. என்னதான் இன்னமும் வாசிப்பிலையும், இலக்கியத்திலையும் விருப்பமிருக்கிற சிலர் புத்தகங்களை எழுதினாலும், அதை வெளியிடுறதெண்டது குதிரைக்கொம்பாகிட்டுது. குறிப்பா வெளியீட்டு விழாவுக்குப் பெரும் செலவு, பிறகு புத்தகங்களை விக்கிறது அதைவிடப் பெரும்பாடு. புத்தக வெளியீடெண்டால் மண்டபத்துக்கு வாடகை கட்டோனும், வாற ஆக்களுக்கு ஏதும் குடிக்க, கடிக்கக் குடுக்கோனும். அந்தச் செலவுக்கு அண்டைக்கு புத்தகமும் விக்காது. அதால இப்ப கன எழுத்தாளர்மார், புத்தகத்தை வெளியிட்டுட்டு . சும்மா குடுக்கிற நிலைமைதான் கூட.

நேற்றொரு புத்தக வெளியீட்டுவிழா. யாழ்ப்பாணம் நாச்சிமார் கோயிலடிக்கு கிட்ட நடந்தது. கிட்டடியில காலமான குப்பிழான் சண்முகம், அவரின்ர பாரியார் ரண்டு பேரும் எழுதின ரண்டு புத்தகங்களும் அண்டைக்கு வெளியிட்டவை. விழாவுக்குப் போனவைக்கு நாக்கு திரும்பத் தேடுற மாதிரி நல்ல கூல்டிரிங்ஸும், றோல்ஸும் குடுத்திச்சினம். விழாவெல்லாம் முடியத்தான் தெரியவந்திச்சுது. புத்தக வெளியீட்டுக்கு அந்தப் பெரிய மண்டபத்தை மட்டுமில்லை, கூல்ட்ரிங்ஸ், றோல்ஸ் எல்லாத்தையும் கூட தன்ர செலவில குடுத்திருக்கி றாராம் ராஜா கிறீம் ஹவுஸின்ர முதலாளி. அவர் நினைச்சிருந்தால் மண்டபத்துக்கு சுளையா நல்ல ரேட் வாங்கிப் போட்டு பேசாமல் இருந்திருக்கலாம். ஆனால் புத்தகங்களில அவருக்கு இருந்த ஈடுபாட்டால தன்னால முடிஞ்சளவுக்கு இப்பிடியான நல்ல வேலையளைச் செய்யிறாராம். கரும்பு தின்ன கைக்கூலி தரும் நல்லமனம் வாழ்க!



- பட்சி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நல்லூர் இராசதானியின் தோரண வாசல் திறப்பு

யாழ்ப்பாணம், ஜூலை 15
யாழ்ப்பாண மரபுரிமை மையத்தினரால் புனரமைக் கப்பட்டு அழகுபடுத்தப்பட்ட நல்லூர் இராசதானியின். சங்கிலியன் தோரண வாசல் திறப்பு நிகழ்வு நாளை ஞாயிற்றுக்கிழமை மாலை 5.30 மணிக்கு இடம்பெற வுள்ளது. யாழ்ப்பாண மரபுரிமை மையத்தின் தலைவர் பேராசிரியர். பரமு புஸ்பரட்ணம் தலைமையில் நிகழ்வு நடைபெறவுள்ளது.

நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.இந்தியத் துணைத் தூதுவர் ராகேஷ் நட்ராஜ் பங்கேற்கவுள்ளார்.
சிறப்பு விருந்தினர்களாக யாழ்.மாவட்டச் செயலர் அ.சிவபாலசுந்தரன், சிவபூமி அறக்கட்டளையின் தலைவர் செஞ்சொற்செல்வர் கலாநிதி ஆறு.திரு முருகன், யாழ்ப்பாணம் தொல்பொருள் திணைக்கள உதவிப் பணிப்பாளர் யு.எ.பந்துலஜீவ ஆகியோர் சிறப் பிக்கவுள்ளனர். (ச-ரி-66)

# இன்றைய (ராசிபலன்)

**மேடம்:** உற்சாகமாகக் காணப்படு வீர்கள். எதிர்பாராத பணவரவுக்கும் வாய்ப்பு உண்டு. புதிய முயற்சிகளைத் தவிர்ப்பது நல்லது. ஆதாயம் உண்டாகும்.

**இடபம்:** உறவினர்களால் ஆதாயம் உண்டாகும். செலவுகள் அதிகரித்தாலும் கடன் வாங்காமல் சமாளித்துவிடுவீர்கள். பணிச்சுமையின் காரணமாக உடல் அசதி உண்டாகும்.

**மிதுனம்** : புதிய முயற்சிகளைத் தவிர்க்கவும். உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை. உறவினர்கள் உதவி கேட்டு வருவார்கள். செலவுகள் ஏற்படக் கூடும். பிணக்குகள் நீங்கும்.

**கடகம்:** மகிழ்ச்சியான நாளாக அமை யும். அரசாங்கக் காரியங்கள் அனுகூல மாக முடியும். புதிய முயற்சிகள் சாத கமாக முடியும். ஆதாயம் உண்டாகும். மகிழ்ச்சியும் உற்சாகமும் பெறுவீர்கள்.

**சிம்மம்:** உங்கள் முயற்சிக்கு ஆதரவு தருவார். வாழ்க்கைத்துணைவழி உறவு களிடம் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். குடும்பத்தினருடன் உறவினர் வீட்டு விசேஷங்களில் கலந்துகொள்வீர்கள்.

**கன்னி:** உற்சாகமான நாள். தொட்ட காரி யங்கள் வெற்றிகரமாக முடியும். குடும் பத்தினர் உங்கள் ஆலோசனையை ஏற்றுக்கொள்வார்கள். உறவுகளால் எதிர்பாராத பணவரவு கிடைக்கும்.

**துலாம்:** எதிலும் பொறுமையைக் கடைப்பிடிப்பது நல்லது. மற்றவர்களால் மறை முகத் தொல்லைகளும், விமர்ச னங்களும் ஏற்படக்கூடும். செலவு செய்யவேண்டி வரும்.

**விருச்சிகம்** : புதிய முயற்சிகளைத் தவிர்க்கவும். வழக்கமான பணிகளிலும் கூடுதல் கவனம் தேவை. மற்றவர்களு டன் வீண் மனஸ்தாபம் ஏற்படக்கூடும் பொறுமையைக் கடைப்பிடிக்கவும்.

**தனுசு:** சுறுசுறுப்பாகச் செயல்படும் நாள். குடும்பத்தில் உங்கள் ஆலோச னைக்கு முக்கியத்துவம் கிடைக்கும். பிள்ளைகளால் பெருமை உண்டாகும். செலவுகள் ஏற்படக்கூடும்.

**மகரம்:** அனுகூலமான நாள். தாயின் விருப்பத்தைப் பூர்த்தி செய்வீர்கள். இளைய சகோதர வகையில் செலவுகள் ஏற்படக்கூடும். மற்றவர்களுடன் வாக்கு வாதம் செய்வதைத் தவிர்க்கவும்.

**கும்பம்:** மனதில் தன்னம்பிக்கையும் தைரியமும் அதிகரிக்கும். முக்கிய முடிவு எடுப்பதற்கு உகந்த நாள். பிணக்கு கள் நீங்கும். உறவினர்கள் வருகை யால் வீட்டில் மகிழ்ச்சி உண்டாகும்.

**மீனம்:** புதிய ஆடை, ஆபரணங்களை வாங்கும் யோகம் உண்டாகும். உறவி னர்கள் வருகையால் வீட்டில் கல கலப்பான சூழ்நிலை ஏற்படும். புதிய முயற்சிகளை தொடங்குவது நல்லது.

# கைப்பைகள் உற்பத்தி வடிவமைப்புப் பயிற்சி

யாழ்ப்பாணம், ஜூலை 15
தோலுற்பத்தியில் கைப்பை வடிவமைப்பதற்கான பயிற்சிநெறி கைத்தொழில் அபிவிருத்திச்சபையால் யாழ்ப்பாணத்தில் நடத்தப்படவுள்ளது.
எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் 27ஆம் திகதி தொடக்கம் செப்ரெம்பர் 3ஆம் திகதிவரை 8 நாள்கள் இந்தப் பயிற்சிநெறி நடத்தப்படவுள்ளது.
இதன்போது கைப்பை உற்பத்தியாளர்களுக்கான வடி வமைப்புத் தொடர்பில் தொழில்நுட்பப் பயிற்சி அளிக் கப்படும்.
பயிற்சிநெறியில் பங்கேற்க விரும்புவோர் யாழ்.மாவட்ட செயலகத்திலுள்ள கைத்தொழில் அபிவிருத்திச்சபை யில் பதிவுகளை மேற்கொள்ளலாம் என அறிவிக்கப் பட்டுள்ளது. (ச)

## புலமைப்பரிசில் சித்திபெற்ற

# மாணவருக்குப் பரிசளிப்பு முற்றவெளியில் நாளை

யாழ்ப்பாணம், ஜூலை 15
ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதிய சபையின் அங்கத்த வர்களின் தரம் - 5 புலமைப்பரிசிலில் சித்திபெற்ற பிள்ளை களுக்கான பரிசளிப்பு நிகழ்வு நாளை ஞாயிற்றுக்கிழமை இடம்பெறவுள்ளது.
யாழ்ப்பாணம் முற்றவெளி மைதானத்தில் காலை 9 மணிக்கு இந்த நிகழ்வு இடம்பெறவுள்ளது. நிகழ்வில் அமைச்சர் மனுஷ நாணயக்கார, இராஜாங்க அமைச்சர் ஜகத் புஸ்பகுமார ஆகியோர் பங்கேற்கவுள்ளனர்.
பரிசில் பெறும் மாணவர்கள் பாடசாலைச் சீருடையுடன் வருகை தரவேண்டும் என ஏற்பாட்டாளர்களால் அறிவிக் கப்பட்டுள்ளது. (ச-ரி3-159)

## வவு.பல்கலையில்

# ஊழியர் சங்கத்தின் நிர்வாகிகள் தெரிவு

வவுனியா, ஜூலை 15
வவுனியா பல்கலைக்கழக கல்விசார் ஊழியர் சங்க வருடாந்தப் பொதுக்கூட்டமும் புதிய ஆண்டுக்கான நிர்வாகத் தெரிவும் நேற்று முன்தினம் வியாழக்கிழமை வவுனியா பூந்தோட்ட பல்கலைக்கழகக் கட்டடத் தொகுதியில் இடம்பெற்றது.
சங்கத் தலைவர் ஜெ.ஜெயபாஸ்கரன் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் தலைவராக கே.பூங்கண்ணன், உபதலைவராக திருமதி பீ.அனுஷா, செயலாளராக யூ.எல்.றியாழ், உபசெயலாளராக திருமதி என்.ராஜகு மாரி, பொருளாளராக சி.சுதர்சன் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர்.
நிர்வாகசபை உறுப்பினர்களாக தி.ஜே.எப்.ஜஸ்றீன், எம்.சுதர்சன், எஸ்.சைரஜன், திருமதி கு.டனுஷா மற்றும் உள்ளகக் கணக்காய்வாளர் த.தாட்சாயினி, விளையாட்டு இணைப்பாளர் சி.ரகுவரன் ஆகியோர் தெரிவுசெய்யப்பட்டனர். (ச-ரி)

# ஆடிப்பிறப்பையொட்டி கவிதைப் போட்டிகள்

யாழ்ப்பாணம், ஜூலை 15
யாழ்ப்பாண தமிழ்ச்சங்கத்தின் ஏற்பாட்டில் ஆடிப் பிறப்பு தினத்தை முன்னிட்டு வடமாகாண ரீதியாக ஆடிப்பிறப்பு கவிதைப்போட்டி பாடசாலை மட்டத் திலும் திறந்த மட்டத்திலும் நடத்தப்படவுள்ளது.
மரபுக் கவிதையாயின் பத்துப் பாடல்களுக்கு மேற்படாமலும் புதுக்கவிதையாயின் இருபத் தைந்து வரிகளுக்கு மேற்படாமலும் இருத்தல் மற்றும் சொந்த ஆக்கமாக இருத்தல் கவிதைப் போட்டிக்குரிய விதிமுறைகளாகும்.
மாணவர்கள் அதிபர் ஊடாக தமது ஆக்கங் களை 'ஆடிப்பிறப்பு கவிதைப் போட்டி' தலைவர், யாழ்ப்பாணம் தமிழ்ச்சங்கம், இல.15 சிறாம் பியடிலேன், யாழ்ப்பாணம் எனும் முகவரிக்கு அனுப்பி வைக்கவேண்டும்.
திறந்த போட்டியில் பங்குபெற விரும்புவர்களும் தங்கள் கவிதையை மேற்குறித்த முகவரிக்கு அனுப்பி வைக்கலாம். திறந்த போட்டியின் இறு திச் சுற்று நேரடியாக நடைபெறுவதுடன் தெரிவு செய்யப்பட்டவர்களுக்கு இதுதொடர்பாக எழுத்து மூலமாக அறிவிக்கப்படும்.
போட்டிகளுக்கு ஆக்கங்களை எதிர்வரும் 22 ஆம் திகதிக்கு முன்னதாக அனுப்பிவைக்க வேண்டும் என தமிழ் சங்க செயலாளர் கு.றஜீ பன் தெரிவித்துள்ளார். (ச-ரி)

# கைத்தொழில் முயற்சியாளர் விருதுக்கு விண்ணப்பங்கள்

யாழ்ப்பாணம், ஜூலை 15
தேசிய ரீதியில் நுண்ணிய, சிறிய, நடுத்தர மற் றும் பெரிய தொழில் முயற்சிகளில் ஈடுபட்டு வரும் சிறந்த தொழில் முயற்சியாளர்கள் தெரிவுசெய்யப்பட்டு அவர்களுக்கு விருது கையளிக்கப்படவுள்ளது. கைத்தொழில் அமைச்சின் வழிகாட்டலில் இலங்கை கைத்தொ ழில் அபிவிருத்திச்சபை இந்தச் செயற்பாட்டை முன்னெடுக்கவுள்ளது.
விருதுக்கு விண்ணப்பிக்க விரும்பும் தொழில் முயற்சியாளர்கள் விண்ணப்பப்படிவங்களை இலங்கைக் கைத்தொழில் அபிவிருத்திச்சபை யின் மாவட்ட அலுவலகங்களில் பெற்றுக் கொள்ள முடியும். விண்ணப்பப்படிவங்கள் எதிர்வ ரும் 31ஆம் திகதிக்கு முன்பதாக சமர்ப்பிக்கப்பட வேண்டும் என்றும் இலங்கை கைத்தொழில் அபிவிருத்திச்சபை அறிவித்துள்ளது.. (ச-ரி2)

# நல்லூர் பாலகதிர்காமர் மஹோற்சவம்

யாழ்ப்பாணம், ஜூலை 15
நல்லூர் ஸ்ரீபாலகதிர்காம ஆலயத்தின் வருடாந்த மஹோற்சவம் நாளைமறுதினம் திங்கட்கிழமை ஆரம்பமாகவுள்ளது.
தொடர்ந்து பதினாறு நாள்கள் உற்சவம் நடைபெறவுள்ளது.
மஹோற்சவத்தில் 17 ஆம் நாள் காளை மாடுகள் இழுத்து வர ஆடிவேல் இரத பவனி இடம்பெறும்.
தொடர்ந்து கலை, கலாசார நிகழ்வோடு எம்பெருமான் பாலமுருகன் தேவலோக ஐராவத யானையில் சட்டநாதர் வீதியில் மாலை 6 மணிக்கு வலம் வருவார்.
18 ஆம் நாள் வைரவர் சாந்தியுடன் மஹோற்சவம் நிறைவுறும் என்று ஆலய தேவஸ்தானம் தெரிவித்துள்ளது. (ச-ரி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நாளொரு நல்வார்த்தை

"வாழ்க்கையில் நான் மிகப் பெரிய செல்வமாகக் கருதுவது பணத்தையோ அல்லது பொருளையோ அல்ல. காலத்தை மட்டுமே"

— ஸ்டீவ் ஜாப்ஸ்


## பொய்யிலே பிறந்து பொய்யிலே வளர்ந்து...

எந்தவொரு நாட்டிலும் ஒவ்வொரு துறைக்கும் நியமிக்கப்படும் அமைச்சர்கள் அந்தத் துறைசார்ந்த வல்லுநர்களாகவே இருப்பார்கள். ஆனால் இலங்கையின் ஊடகத்துறை அமைச்சராக நியமிக்கப்படுபவர் எந்த எல்லைக்குச்சென்றும் பொய் சொல்வதில் வல்லுநராக இருக்கவேண்டும். இலங்கையின் ஊடகத்துறை அமைச்சர்களாகப் பதவி வகித்த எவரும் இதற்கு விதிவிலக்கல்ல. இப்போதைய ஊடகத்துறை அமைச்சர் பந்துல குணவர்த்தன யாழ்ப்பாணத்தில் வைத்து ஊடகங்களுக்கு நேற்றுமுன்தினம் தெரிவித்த கருத்தைப் பார்க்கும்போது அவரும் அந்தப் பொய் சொல்லும் கலையில் வல்லவர்தான் என்பது புலனாகின்றது. இதுவரை 'இலங்கை பெற்றுக்கொண்டுள்ள வெளிநாட்டுக் கடனில், மிகப்பெரிய தொகை வடக்கு, கிழக்குக்காக பெற்றுக் கொள்ளப்பட்ட கடன்தான்' என்று அவர் குறிப்பிட்டிருந்தார்.

'கடந்த சில தசாப்தங்களாக ஏனைய பகுதிகளை விடவும் வட பகுதியில் சொத்துகள் பெருமளவில் அழிவடைந்துள்ளன. இதன் காரணமாக, அரசாங்கம் வடக்கின் வசந்தம் மற்றும் கிழக்கின் உதயம் முதலான மிகப் பெரிய கடன் யோசனைத் திட்டங்களைக் கொண்டு வந்தது. இந்தக் கடன் மூலம் சகல பாதைகளும் புனரமைக்கப்பட்டதுடன் முழுமையாக அகற்றப்பட்டிருந்த தொடருந்து வழித்தடங்களும் புனரமைக்கப்பட்டன. மின்சார விநியோகம், தொலைத்தொடர்பு சேவைகள், நீர்ப்பாசனத் திட்டங்கள் என்பன கொண்டுவரப்பட்டன' என்றும் அவர் இதன்போது தெரிவித்திருந்தார்.

இலங்கையை கடன் வாங்கும் நிலைமைக்குத் தள்ளியவர்கள் யார்? இந்தத் தீவில் போர் மூள்வதற்கு காரணமானவர்கள் யார்? இந்தக் கேள்விகளுக்கான விடைகளைத்தேடினால், அவை பௌத்த – சிங்கள பேரினவாதத்தரப்பையே சுட்டி நிற்கும். இந்த நாட்டில் தமிழ் மக்களை இரண்டாம் தரப் பிரஜைகளாக நடத்த முற்பட்டு அவர்களின் உரிமைகளைப் பறித்ததன் விளைவாகவே போர் மூண்டது. அந்தப் போருக்காக வெளிநாடுகளில் எல்லாம் ஆயுதங்களை வாங்கிக் குவித்தது இலங்கை அரசாங்கம். ஒருவாறு போர் முடிந்த பின்னர் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களை அபிவிருத்தி செய்கின்றோம் என்ற போர்வையில் உலக நாடுகளிடம் கடன் வாங்கியது. ஆனால் இவையெல்லாம் வடக்கு – கிழக்கு மாகாணங்களுக்கு முழுமையாகச் சென்றடைந்தன என்றும் கூறமுடியாது. வடக்கு – கிழக்கு மாகாணங்களைக்காட்டி பெற்றுக்கொண்ட கடனில் பெரும் பகுதியை தென்னிலங்கைக்கே செலவிட்டனர். அதில் கணிசமானவை ராஜபக்சக்களின் பொக்கெற்றுக்குள் தரகுப் பணமாக சென்றிருந்தன. இதனாலேயே நல்லாட்சிக் காலத்தில் அவர்கள் பல வழக்குகளை எதிர்கொண்டார்கள் என்பதும், 'மிஸ்டர் 10%' என்ற அடைமொழி பஸில் ராஜபக்சவுக்கு வந்ததும் வேறுகதை.

வடக்கு – கிழக்கில் கிள்ளித்தெளித்து முன்னெடுத்த அபிவிருத்திப் பணிகள்கூட அந்தப் பிரதேச மக்களுக்கானவை அல்ல. சிங்கள மக்கள் சுற்றுலா வந்து செல்வதற்கு இலகுவாக பெரு வீதிகள் காப்பெற்றாகின. ஆனால் வடக்கு – கிழக்கு மக்களின் அன்றாட வீதிகள் இன்னமும் தார் போடப்படாமல் குண்டும் குழியுமாகவே இருக்கின்றன. ஒரு பிரதேசத்தின் அபிவிருத்தி என்பது, அந்தப் பகுதி மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதுதான். ஆனால், வடக்கு – கிழக்கில் வேலைவாய்ப்புகளை வழங்கக் கூடிய – அந்த மக்களின் வாழ்க்கைத்தரத்தை உயர்த்தக்கூடிய – எந்தவொரு திட்டங்களும் மேற்கொள்ளப்படவில்லை. அப்படியிருக்கையில் இலங்கைக்கான கடனின் பெரும்பகுதி வடக்கு – கிழக்குக்காகப் பெறப்பட்டது என்று சொல்லும் போது பந்துலவுக்கும் வாய் கூசவில்லையா? பொய் சொல்வது என்றாலும் பொருந்தச் சொல்லவேண்டாமா?





# வடக்கு – கிழக்குக்காகவே கடன் பெற்றதாம் இலங்கை

### 'உருட்டுகிறார்' ஊடகத்துறை அமைச்சர்

**கொழும்பு, ஜூலை 15**

**இலங்கை பெற்றுக்கொண்டுள்ள வெளிநாட்டுக் கடனில், மிகப்பெரிய தொகை வடக்கு, கிழக்குக்காக பெற்றுக் கொள்ளப்பட்ட கடனாகும் என ஊடகத்துறை அமைச்சர் பந்துல குணவர்த்தன தெரிவித்துள்ளார்.**

யாழ்ப்பாணத்தில் வைத்து ஊடகங்களுக்கு நேற்றுமுன்தினம் கருத்துத் தெரிவிக்கும் போதே மேற்கண்டவாறு கூறினார்.


'கடந்த சில தசாப்தங்களாக ஏனைய பகுதிகளை விடவும் வட பகுதியில் சொத்துகள் பெருமளவில் அழிவடைந்துள்ளன. இதன் காரணமாக, அரசாங்கம் வடக்கின் வசந்தம் மற்றும் கிழக்கின் உதயம் முதலான மிகப் பெரிய கடன் யோசனைத் திட்டங்களைக் கொண்டு வந்தது. இந்தக் கடன் மூலம் சகல பாதைகளும் புனரமைக்கப்பட்டதுடன் முழுமையாக அகற்றப்பட்டிருந்த தொடருந்து வழித்தடங்களும் புனரமைக்கப்பட்டன. மின்சார விநியோகம், தொலைத்தொடர்பு சேவைகள், நீர்ப்பாசனத் திட்டங்கள் என்பன கொண்டுவரப்பட்டன. உலக வங்கி, சர்வதேச நாணய நிதியம், ஆசிய அபிவிருத்தி வங்கி மற்றும் ஏனைய நாடுகளிடமிருந்து பெற்றுக்கொண்ட வெளிநாட்டுக் கடன் மூலம் இந்த நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டன' என்று குறிப்பிட்டார். (ஒ-இ)

### ஆடிப்பிறப்பையொட்டி
## கிட்டுப் பூங்காவில் கண்காட்சி

ஆடிப்பிறப்பை முன்னிட்டு வடக்கு மாகாணத்தின் பனை வள உற்பத்திகளை காட்சிப்படுத்தும் கண்காட்சியும் விற்பனையும் கிட்டுப் பூங்காவில் நேற்று வெள்ளிக்கிழமை ஆரம்பிக்கப்பட்டுள்ளது. வடக்கு மாகாண கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளர் திருமதி தே.பாபு தலைமையில் ஆரம்பமான இந்தக் கண்காட்சியை வடக்கு மாகாண பிரதம செயலாளர் எஸ்.செ.சமன்பந்துலசேன ஆரம்பித்து வைத்தார். இந்தக் கண்காட்சி இன்று சனிக்கிழமையும் நாளை ஞாயிற்றுக்கிழமையும் காலை 9 மணி முதல் இரவு 7 மணி வரை நடைபெறவுள்ளது.

வடமாகாண கூட்டுறவு அபிவிருத்தித் திணைக்களமும் வடக்கு மாகாண பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கமும் இணைந்து இந்தக் கண்காட்சியை ஏற்பாடு செய்துள்ளன.

கண்காட்சியில் வடக்கு மாகாணத்தைச் சேர்ந்த கூட்டுறவுச் சங்கங்களின் உற்பத்தி பொருள்கள் காட்சிப்படுத்தப்பட்டுள்ளன. (ச-ரி- ரி2-125,17)



## 2 லட்சம் ரூபா லஞ்சம்; ஆண்டுகள் கடூழியச் சிறை

கொழும்பு, ஜூலை 15

அரசாங்க வேலை வாங்கித் தருவதாகக் குறிப்பிட்டு, பெண்ணொருவரிடம் இருந்து ஒரு லட்சத்து 80 ஆயிரம் ரூபா இலஞ்சம் கேட்டுப் பெற்றுக்கொண்ட குற்றத்தை ஒப்புக் கொண்ட குற்றவாளிக்கு கொழும்பு மேல் நீதிமன்றம் ஒத்திவைக்கப்பட்ட 2 வருட கடூழிய சிறைத்தண்டனை விதித்துள்ளது.

குற்றம் சாட்டப்பட்டவர் ஏற்றுக்கொள்ளப்பட்ட இலஞ்சத் தொகையை அரசாங்கத்துக்குத் தண்டமாகச் செலுத்துமாறும் கொழும்பு மேல் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. (ஒ-இ)

**நாளை** 16.07.2023 ஞாயிற்றுக்கிழமை ஆனி 31

| | |
|---|---|
| சுபநேரம் | : 04.30 - 06.00 |
| ராகுகாலம் | : 09.00 - 10.30 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பேஸ்புக் ஊடாக மோசடி;

## பெண்களே அதிக பாதிப்பு




கொழும்பு, ஜூலை 15

**இந்த வருடத்தின் கடந்த 6 மாதங்களில் சமூக வலைத்தளங்கள் குறித்து 9 ஆயிரத்து 858 முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளன. அவற்றில் அதிகளவான முறைப்பாடுகள் பெண்களிடமிருந்து கிடைத்துள்ளன. இலங்கை கணினிப் பிரிவின் சிரேஷ்ட தகவல் பாதுகாப்பு பொறியியலாளர் ஒருவர் இந்தத் தகவலைத் தெரிவித்துள்ளார்.**

இந்த வருடத்தின் கடந்த ஆறு மாதங்களில் சுமார் 10 ஆயிரம் முறைப்பாடுகள் சமூக ஊடகங்கள் குறித்து கிடைக்கப்பெற்றுள்ளன.

அதில் அதிக முறைப்பாடுகள் மே மாதத்தில் பதிவாகியுள்ளன.

பேஸ்புக் கணக்குகளை ஹேக் செய்தல், போலி பேஸ்புக் கணக்குகளைப் பயன்படுத்துதல், வேலை தருவதாக கூறி பணமோசடி செய்தல் போன்றவை இந்த முறைப்பாடுகளில் அடங்குகின்றன என்றும் அவர் குறிப்பிட்டார். (ச-இ)

## அரச பணியாளர்கள் தெரிவில் மும்மொழிப் புலமை அவசியம்!

### உள்நாட்டலுவல்கள் அமைச்சு வலியுறுத்து

அரச நிறுவனங்களுக்கு ஊழியர்களைத் தெரிவு செய்யும் போது மும்மொழித் திறமையை அரசாங்கம் கருத்திற்கொள்ள வேண்டுமென பொது நிர்வாகம், உள்நாட்டலுவல்கள், அமைச்சின் செயலாளர் அனுராதா விஜயக்கோன் தெரிவித்துள்ளார்.

கொழும்பில் இடம்பெற்ற நிகழ்வில் அவர் இதனைக் குறிப்பிட்டார். அங்கு அவர் மேலும் குறிப்பிடுகையில்,

ஊழலற்ற நாட்டுக்கு அரச ஊழியர் தெரிவில் மும்மொழிப் புலமை அவசியம்.

அரச நிறுவனங்களில் மும்மொழித் திறமையற்ற அதிகாரிகள் செயற்படுவது மக்கள் மத்தியில் சில அசௌகரியங்களை எதிர்நோக்க வழிவகுத்துள்ளது.

மக்கள் மும்மொழித் திறமையைக் கொண்டிராத காரணத்தால் அவர்களது தேவைகளைப் பூர்த்தி செய்து கொள்வதற்காக தவறான வழிகளைத் தேர்ந்தெடுப்பதால் அரசதுறைகளில் ஊழல்கள் இடம்பெறுகின்றன. அதற்கமைய ஊழலற்ற நாட்டை உருவாக்கும் செயல்முறையின் முதற் கட்டமாக அரச நிறுவனங்களுக்கு மும்மொழித் தேர்ச்சியுள்ளவர்கள் தெரிவு செய்யப்பட வேண்டும் - என்றார். (ச-இ)




## இறக்குமதிப் பால்மா சுங்க வரி அதிகரிப்பு

கொழும்பு, ஜூலை 15

இறக்குமதி செய்யப்படும் பால்மாவுக்கான சுங்கவரியில் அரசாங்கம் திருத்தம் மேற்கொண்டுள்ளது.

இந்த வரித்திருத்த கடந்த புதன்கிழமை முதல் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது.

கடந்த காலங்களில் இறக்குமதி செய்யப்படும் ஒரு கிலோகிராம் பால்மாவுக்கு 225 ரூபா சுங்க இறக்குமதி வரி விதிக்கப்பட்டு அதனை நீக்க நடவடிக்கை எடுக்கப்பட்டது.

தற்போது நடைமுறைக்கு வரும் வகையில் இறக்குமதி செய்யப்படும் ஒரு கிலோகிராம் பால்மாவுக்கு 100 ரூபா வரி விதிக்கப்பட்டுள்ளது.

இந்த வரித் திருத்தம் மறு அறிவித்தல் வரை நடைமுறையில் இருக்கும் என்று நிதியமைச்சு தெரிவித்துள்ளது.

இதேவேளை வரி அதிகரிக்கப்பட்டாலும் பால்மாவின் விலையில் மாற்றமில்லை என பால்மா இறக்குமதியாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது. (ச-இ)

## 300 பொருள்களின் இறக்குமதிக் கட்டுப்பாடு வரும் வாரத்தில் தளர்வு!

கொழும்பு, ஜூலை 15

இறக்குமதி செய்யப்படும் மேலும் 300 அத்தியாவசியப் பொருள்களின் கட்டுப்பாடுகளைத் தளர்த்த நடவடிக்கை எடுக்கப்படும் என நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாப்பிட்டிய தெரிவித்துள்ளார்.

தனது உத்தியோகபூர்வ ருவிற்றர் பதிவில் அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

எதிர்வரும் வாரத்தில் 300 வகையான பொருள்களின் மீதான இறக்குமதிக் கட்டுப்பாடுகளைத் தளர்த்த நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். (ச-இ)

## தங்கம் கடத்தல் இருவர் கைது



கொழும்பு, ஜூலை 15

கடல்மார்க்கமாக சட்டவிரோதமான முறையில் எடுத்துச் செல்லப்பட்ட 8 கிலோ 450 கிராம் தங்கத்துடன் இரண்டு சந்தேகநபர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

கற்பிட்டி வன்னிமுந்தலம் கலப்புப் பகுதியில் கடற்படையினர் கடந்த புதன்கிழமை மேற்கொண்ட விசேட சோதனை நடவடிக்கையில் இந்தக் கைது இடம்பெற்றது.

கற்பிட்டி கடற்பகுதியை நோக்கி சந்தேகத்துக்கிடமான வகையில் டிங்கி படகு ஒன்று பயணிப்பதை கடற்படையினர் அவதானித்து சோதனையிட்டபோதே 4 பொதிகளில் தங்கம் மீட்கப்பட்டது.

சந்தேகநபர்களை சட்டநடவடிக்கைக்குட்படுத்தப்பட்டு மேலதிக விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன என கடற்படையினர் தெரிவித்தனர். (ச-இ)

## புற்றுநோய் மருந்துகள் அமெரிக்கா கையளிப்பு

கொழும்பு, ஜூலை 15

53 மில்லியன் டொலர் பெறுமதியான மேலுமொரு தொகுதி புற்றுநோய்க்கான மருந்துகள் மற்றும் மருந்துப் பொருள்களை அமெரிக்கா இலங்கைக்கு வழங்கியுள்ளது.

இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் ஜூலி சாங் கடந்த புதன்கிழமை சுகாதார அமைச்சிடம் கையளித்தார்.

சிறு குழந்தைகளுக்குத் தேவையான புற்றுநோய்க்கான மருந்துகள் மற்றும் மருந்துப் பொருள்களே சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெலவிடம் உத்தியோகபூர்வமாக கையளிக்கப்பட்டதாக அமைச்சு தெரிவித்துள்ளது. (ச-இ)

## இனி வங்கிக் கணக்குகளிலேயே உரமானியக் கொடுப்பனவுகள்!

### விவசாய அமைச்சு தெரிவிப்பு

கொழும்பு, ஜூலை 15

எதிர்வரும் போகத்தில் நெற்செய்கையாளர்களுக்கு உரமான்னியக் கொடுப்பனவுகள் நேரடியாக அவர்களின் வங்கிக் கணக்குகளுக்கு வழங்கப்படும் என விவசாய அமைச்சு தெரிவித்துள்ளது.

ஒரு ஹெக்ரேயருக்கு 20 ஆயிரம் ரூபாவும் உரம் கொள்வனவு செய்வதற்கு இரண்டு ஹெக்ரேயருக்கு 40 ஆயிரம் ரூபாவும் விவசாயிகளுக்கு வழங்குவதற்கு நிதியமைச்சர் என்ற வகையில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவால் முன்மொழியப்பட்டுள்ளது. இந்த முன்மொழிவுக்கு அமைச்சரவை அனுமதித்துள்ளது.

இதேவேளை சிறுபோகத்துக்குத் தேவையான உர இருப்புகளை கொள்வனவு செய்வதற்காக விவசாயிகளுக்கென 11 பில்லியன் ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

நாடுமுழுவதுமுள்ள 5 லட்சத்து 50 ஆயிரம் விவசாயிகளுக்கு இந்த மானியத்தை வழங்க அரசாங்கம் திட்டமிட்டுள்ளது.

இதேவேளை சிறுபோகப் பருவத்துக்குத் தேவையான ரி.எஸ்.பி. உரம் ஏற்கனவே விவசாயிகளுக்கு இலவசமாக வழங்கப்பட்டு வருகின்றது. (ச-இ)

## கிழக்கு ஆளுநர் நியமனம் நஸீர் அஹமட் கொதிப்பு

கிழக்கு மாகாணத்தின் ஆளுநராக செந்தில் தொண்டமான் நியமிக்கப்பட்டுள்ள நிலையில், அரசாங்கத்தில் அங்கம் வகிக்கும் முஸ்லிம் தரப்புகளுக்கு இது விசனத்தை ஏற்படுத்தியுள்ளது. அமைச்சர் ஹாபிஸ் நஸீர் அஹமத் பகிரங்கமாகவே கிழக்கு ஆளுநரை விமர்சிக்க ஆரம்பித்துள்ளார்.

கடந்த செவ்வாய்க்கிழமை நடைபெற்ற காத்தான்குடி பிரதேச அபிவிருத்திக் குழுக் கூட்டத்தில் அமைச்சர் நஸீர் அஹமட், கிழக்கு ஆளுநரைப் பற்றி காரசாரமாக விமர்சித்துள்ளார். கோட்டக்கல்வி அதிகாரியாக இருந்த எம்.எம்.ஹலாவுதீனின் இடமாற்றம் பிழையானது. அது நிறுத்தப்பட வேண்டும் என்று கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. (எ-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 2024 இல் '5ஜி' 5G



## தொழில்நுட்ப இராஜாங்க அமைச்சர் தெரிவிப்பு

கொழும்பு, ஜூலை 15

**இலங்கையை துரிதமாக டிஜிட்டல் மயப்படுத்துவதற்கென 'டிஜி இகோன்' என்ற வேலைத் திட்டம் எதிர்வரும் ஒக்ரோபர் மாதம் ஆரம்பிக்கப்படும். அடுத்த வருடம் முற்பகுதியில் 5 ஜி தொழில்நுட்பம் நாட்டில் அறிமுகப்படுத்தப்படும் என்று தொழில்நுட்ப இராஜாங்க அமைச்சர் கனக ஹேரத் தெரிவித்துள்ளார்.**

ஜனாதிபதி ஊடக மையத்தில் நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை இடம்பெற்ற ஊடக மாநாட்டில் கருத்துத் தெரிவிக்கையில் அவர் இதனைத் தெரிவித்தார்.

அங்கு மேலும் அவர் கூறுகையில்,

முதற்கட்டமாக டிஜிட்டல் மயப்படுத்தும் வேலைத்திட்டத்தில் டிஜிட்டல் அடையாள அட்டை வழங்கும் பணிகள் துரிதப்படுத்தப்படும். இலங்கை - இந்திய அரசாங்கங்களுக்கிடையில் கைச்சாத்திட்ட புரிந்துணர்வு ஒப்பந்தம் ஒன்றின் மூலம் இந்த வேலைத்திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இந்த வேலைத்திட்டத்தின் முதல் கட்ட பணிகளுக்காக இந்திய அரசாங்கம் 300 மில்லியன் ரூபாவை நன்கொடையளிக்க முன்வந்துள்ளது. இலங்கையின் உயர் கல்வியில் அதிகளவான பட்டதாரிகள் கலைத்துறையிலேயே தமது பட்டங்களைப் பெற்றுக் கொள்கின்றனர். தகவல் தொழில்நுட்ப துறையில் பிரவேசிக்க அவர்கள் விரும்பும்பட்சத்தில் கலைத்துறைப் பட்டத்துக்கு மேலதிகமாக 6 மாதகால பாடநெறியை தொடர்வதற்கான பணிகளை கல்வி அமைச்சுடன் இணைந்து முன்னெடுக்க எதிர்பார்த்துள்ளோம்.

அடுத்த வருட முற்பகுதியில் 5ஜி தொழில்நுட்பம் இலங்கையில் அறிமுகப்படுத்தப்படும். தற்போது நடைமுறையில் உள்ள 4 ஜி சேவையைவிட 100 மடங்கு வேகத்தை 5ஜி வழங்கும் - என்றார். (ச-இ)

## வலம்புரிச் சங்கை விற்பதற்கு முயன்றோர் கைது

கொழும்பு, ஜூலை 15

அரிய வகையான வலம்புரிச் சங்கை விற்பனை செய்ய முயன்ற இரண்டு பெண்கள் உட்பட 6 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தச் சம்பவம் ஜா எல பிரதேசத்தில் கடந்த புதன்கிழமை இடம்பெற்றுள்ளது. பொலிஸாருக்குக் கிடைத்த தகவலுக்கமைய மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பில் குறித்த அறுவரும் கைதுசெய்யப்பட்டனர் என பொலிஸார் தெரிவித்தனர். (ச-ரி-22)

## பஸில் நினைத்தது வேறு நடந்தது என்னவோ!

### போட்டுடைத்த உதய கம்மன்பில

கொழும்பு, ஜூலை 15

ஜனாதிபதியாக வேண்டும் என்ற நோக்கத்துடன் பஸில் ராஜபக்ச பொருளாதாரப் பாதிப்பை தீவிரப்படுத்தினார். பிரச்சினைக்குத் தீர்வு காண முன்வைத்த திட்டங்களுக்கு அவர் பெரும் தடையாக இருந்தார். நிதி வங்குரோத்து தொடர்பில் ஆராய சாகர காரியவசம் தலைமையில் அமைக்கப்பட்ட குழு பயனற்றது என்பதை சபாநாயகர் அறியாவிட்டாலும் நாட்டு மக்கள் நன்கு அறிவார்கள். இந்த கபுடா குழுவில் அங்கம் வகிக்க முடியாது என எதிர்க்கட்சிகளின் உறுப்பினர்கள் விலகி யுள்ளார்கள். இவ்வாறு பிவிதுரு ஹெல உறுமய கட்சியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான உதய கம்மன்பில தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

கோத்தாபய ராஜபக்சவின் நிர்வாகத்தை பலவீனப்படுத்தி நாடாளுமன்றத்தின் ஊடாக பொதுஜன பெரமுனவின் பலத்துடன் ஜனாதிபதியாகும் நோக்கத்தோடு பஸில் ராஜபக்ச பொருளாதாரப் பாதிப்பை தீவிரப்படுத்தினார். பொருளாதாரப் பாதிப்புக்கு தீர்வு காண அமைச்சரவையில் பல யோசனை முன்வைக்கப்பட்ட போது பஸில் ராஜபக்ச அதற்குத் தடையாக செயற்பட்டார். பஸில் ராஜபக்ச வகுத்த திட்டம் ஒன்று, நடந்தது வேறொன்று. கோத்தாபய ராஜபக்ச பதவி விலகுவதற்கு ஒரு மாதத்துக்கு முன்னரே அவர் நாடாளுமன்ற உறுப்பினர் பதவியைத் துறக்கும் அளவுக்கு பொருளாதாரப் பாதிப்பு தீவிரமடைந்தது.

பொருளாதாரப் பாதிப்புக்கு பஸில் ராஜபக்ச பொறுப்புக்கூற வேண்டும் என்பதை அனைவரும் அறிந்துள்ள நிலையில் பொதுஜன பெரமுனவின் பொதுச்செயலாளர் சாகர காரியவசம் தலைமையில் நிதி வங்குரோத்து நிலை தொடர்பில் ஆராய நாடாளுமன்ற தெரிவுக்குழு அமைக்கப்பட்டுள்ளது. இந்த கபுடா குழுவில் அங்கம் வகிக்க முடியாது என எதிர்க்கட்சிகளின் உறுப்பினர்கள் விலகி யுள்ளார்கள் - என்றார். (எ-இ)



## சுவீடன் பெண்ணை மணந்த யாழ்.வாசி

யாழ்ப்பாணம், ஜூலை 15

சுவீடன் நாட்டுப் பெண்ணை யாழ்ப்பாணத்தை சேர்ந்த இளைஞர் ஒருவர் திருமணம் செய்துள்ளார். யாழ்ப்பாணம் மானிப்பாய் பகுதியில் தமிழ்க் கலாசார முறைப்படி இந்தத் திருமணம் நடந்துள்ளது. மணப்பெண்ணின் உறவினர்களான சுவீடன் நாட்டைச் சேர்ந்தவர்கள் தமிழர் பாரம்பரிய முறையைப் பின்பற்றி வைபவத்தில் பங்கேற்றுள்ளனர். இந்தத் திருமணத்தின் ஒளிப்படங்கள் தற்போது சமூக வலைத்தளங்களில் பகிரப்படுவதுடன் மணமக்களுக்கு வாழ்த்துக்களும் தெரிவிக்கப்படுகின்றன. (ச-27)



## கைது!

யாழ்ப்பாணம் ஜூலை 15

கொடிகாமம், கச்சாய்ப் பகுதியில் கேரளக் கஞ்சாவை உடைமையில் வைத்திருந்த குற்றச்சாட்டில் இளைஞர் ஒருவர் கடந்த புதன்கிழமை கைதுசெய்யப்பட்டுள்ளார் எனக் கொடிகாமம் பொலிஸார் தெரிவித்தனர்.

பொலிஸாருக்குக் கிடைத்த புலனாய்வுத் தகவலுக்கமைய இந்தக் கைது இடம்பெற்றது.

கைதுசெய்யப்பட்ட 26 வயதுடைய சந்தேகநபரிடமிருந்து 15 கிராம் கஞ்சா மீட்கப்பட்டுள்ளது.

சந்தேகநபரை சாவகச்சேரி நீதிவான் நீதிமன்றில் முற்படுத்த விசாரணைகள் மேற்கொள்ளப்படுகின்றன என்றும் பொலிஸார் தெரிவித்தனர். (ச-ரி2-125)

## 2024 ஆம் ஆண்டுக்கான தரம் - 1 மாணவர் அனுமதி ஒகஸ்ட் 18 முடிவுத் திகதி

2024 ஆம் ஆண்டுக்கான தரம் ஒன்றுக்கு மாணவர்களை அனுமதிப்பது தொடர்பிலான விவரங்கள் அடங்கிய அறிவுறுத்தல்களை கல்வி அமைச்சு நேற்றுமுன்தினம் வெளியிட்டுள்ளது. மாதிரி விண்ணப்பப் படிவம் ஒன்று www.moe.gov.lk என்ற இணையத்தளத்தில் வெளியிடப்பட்டுள்ளது என்றும் தெரிவிக்கப்படுகிறது.

2024 ஆம் ஆண்டில் தங்கள் பிள்ளைகளை அரச பாடசாலைகளில் முதலாம் வகுப்பில் சேர்க்க விரும்பும் பெற்றோர் அல்லது சட்டபூர்வ பாதுகாவலர்கள், மாதிரிப் படிவம் மற்றும் அறிவுறுத்தல்களின்படி தயாரிக்கப்பட்ட விண்ணப்பங்களைச் சமர்ப்பித்து பதிவுத் தபாலில் சம்பந்தப்பட்ட பாடசாலை அதிபர்களுக்கு அனுப்ப வேண்டும். இதன் முடிவுத்திகதி எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் 18ஆம் திகதி என அறிவிக்கப்பட்டுள்ளது. (ச-இ)

## தவறான முடிவெடுத்து யுவதி உயிர்மாய்ப்பு!

கொடிகாமம், ஜூலை 15

இளம் பெண்ணொருவர் தவறான முடிவெடுத்து உயிரை மாய்த்துள்ளார் எனத் தெரிவிக்கப்படுகிறது. இந்தச் சம்பவம் சாவகச்சேரி, மறவன்புலவுப் பகுதியில் கடந்த புதன்கிழமை இடம்பெற்றுள்ளது.

அதேபகுதியைச் சேர்ந்த மிரேஸ் சங்கீதா (வயது - 24) என்ற யுவதியே உயிரிழந்துள்ளார். குடும்பப் பிரச்சினை காரணமாகவே அவர் தவறான முடிவெடுத்து உயிரிழந்துள்ளார் என முதற்கட்ட விசாரணையில் தெரியவந்துள்ளது. பிரதேச திடீர் மரண விசாரணை அதிகாரி ஆர். நிசாந்தன் மரண விசாரணையை மேற்கொண்டார். சட்ட மருத்துவ அதிகாரியின் உடற் கூற்றுப் பரிசோதனையின் பின்னர் சடலம் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது. (ச-ரி3-159)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மரண அறிவித்தல்

தோற்றம் 24 05 1943



மறைவு 14 07 2023

### திருமதி கோமளம் அம்பலவாணர்

( இளைப்பாறிய அதிபர், யா/அராலி சரஸ்வதி மகா வித்தியாலயம் )

காரைநகர் பயிரிக்கூடலை பிறப்பிடமாகவும் அராலி தெற்கை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி.கோமளம் அம்பலவாணர் அவர்கள் கொழும்பில் இறைபதமடைந்தார்.
அன்னார் காலஞ்சென்ற விசுவநாதன் அம்பலவாணர் (ஓய்வுபெற்ற உப அதிபர்) அவர்களின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற கந்தையா - சரஸ்வதி தம்பதிகளின் மூத்த மகளும் காலஞ்சென்ற விசுவநாதன் - கைலாயபதி தம்பதிகளின் மருமகளும் பிருந்தா (வைத்தியர் - களுபோவில), சுகந்தா (மிருகவைத்தியர்), ஜயந்தா (பொறியியலாளர் - RDA) ஆகியோரின் பாசமிகு தாயாரும், சிவகாந்தன் (பொறியியலாளர்), விஷ்ணுகுமார் (பொறியியலாளர்), சிவானந்தன் (பொறியியலாளர்) ஆகியோரின் பாசமிகு மாமியாரும் சுஜன், லக்ஷன், ஜெய்ஷன், சீத்தானி, நதினி ஆகியோரின் பாசமிகு அம்மம்மாவும், நவரட்ணராஜா (லண்டன்), வேதாரணியம்மா ஆகியோரின் சகோதரியும் காலஞ்சென்ற சிற்றம்பலம், சுசீலா (லண்டன்), நரேந்திரன் ஆகியோரின் மைத்துனியும், இரட்னேஸ்வரியின் சகலியுமாவார். அன்னாரின் பூதவுடல் இன்று சனிக்கிழமை (15.07.2023) காலை 8.00 மணி முதல் இரவு 8.00 மணிவரை கல்கிசை மகிந்த மலர்ச்சாலையில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு, நாளை ஞாயிற்றுக்கிழமை (16.07.2023) அன்று காலை 8.00 மணிக்கு இறுதிக் கிரியைகள் நடைபெற்று பூதவுடல் 10.00 மணியளவில் தெகிவளை - கல்கிசை பொதுமயானத்தில் தகனக் கிரியைகள் நடைபெறும்.
இவ்வறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல் : குடும்பத்தினர்
பிருந்தா - 0777 718061, சுகந்தா - 0777 259102
ஜயந்தா - 0779 226052

(Cr.37260) (N.1)


## மதில் உடைந்து வீழ்ந்ததில் நகரசபைப் பணியாளர் சாவு!

கொழும்பு, ஜுலை 15
பாணந்துறை நகரசபைக்குச் சொந்தமான மதில் ஒன்று இடிந்து வீழ்ந்ததில் நகரசபையின் பணியாளர் ஒருவர் அதில் சிக்கி உயிரிழந்துள்ளார்.
இந்தச் சம்பவம் நேற்றுமுன் தினம் வியாழக்கிழமை நடந்துள்ளது என்று பாணந்துறை பொலிஸார் தெரிவித்தனர். உயிரிழந்தவர் அதேபிரதேசத்தைச் சேர்ந்த 4 பிள்ளைகளின் தந்தையென தெரிவிக்கப்படுகிறது.
பணியாளர் மதில் சுவருக்கு அருகில் துப்புரவுப் பணியில் ஈடுபட்டிருந்த வேளை மதில் சுவர் இடிந்து அவர் மீது வீழ்ந்ததில் இந்த அசம்பாவிதம் நிகழ்ந்துள்ளது.
அருகிலிருந்தவர்கள் அவரை உடனடியாக மீட்டு மருத்துவமனையில் சேர்த்தபோதும் அவர் சிகிச்சை பயனின்றி உயிரிழந்துள்ளார். சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளைபொலிஸார் முன்னெடுத்துள்ளனர்.
(ச-ரி2- 22)


The Principal, Staff and Students
of
Jaffna College
have the pleasure of inviting you
to
the release of a special
Bicentennial Commemorative Cover followed by a
Cultural Programme
on
Monday 17th July at 4.00 p.m
&
The Prize Giving
on
Saturday 22nd July 2023
At 4.00 p.m

1823 - 2023 Serving the Community



## அதிகாரப் பகிர்வுக்கான இயக்கம்

13 ஆவது திருத்தச் சட்டத்தை முழுமையாக நடைமுறைப்படுத்துவதும் இந்தியாவின் வகிபாகமும் பற்றிய கலந்துரையாடலுக்கான அழைப்பு

யாழ்ப்பாண மத்திய கல்லூரி அருகிலுள்ள
தந்தை செல்வா கலையரங்கத்தில்
2023 ஜூலை 15, சனிக்கிழமை, பிற்பகல் 3.00 மணிக்கு.

தலைமை :
பேராசிரியர் சி. பத்மநாதன்,
வேந்தர், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

பங்கேற்பவர்கள்:

1. திருமதி. கோசலை மதன்
   தலைவர், சட்டபீடம், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்
2. திரு. சிவசிதம்பரம் கிருஷ்ணானந்தன்
   முன்னாள் தேசிய மதியுரைஞர், அரசிறைப் பகிர்வுக்கான ஆற்றலை மேம்படுத்தல்
3. திரு. கந்தப்பு பத்மநாதன்
   முன்னாள் செயலாளர், கிழக்கு மாகாண சபை,
   முன்னாள் FAO மதியுரைஞர்
4. திரு. இராசையா பேரின்பநாயகம்
   முன்னாள் செயலாளர், பாராளுமன்ற எதிர்க்கட்சித் தலைவர் (அ. அமிர்தலிங்கம்)
5. கலாநிதி காசிலிங்கம் விக்னேஸ்வரன் முன்னாள் பா. உ.
   தலைவர், அகில இலங்கைத் தமிழர் மகாசபை.
   முன்னாள் செயலாளர், வடக்கு-கிழக்கு மாகாண சபை.
6. தமிழர் விடுதலைக் கூட்டணி
   தலைவர், வீரசிங்கம் ஆனந்தசங்கரி முன்னாள் பா. உ.
7. தமிழ் மக்கள் கூட்டணி
   தலைவர், நீதியரசர் க. வி. விக்னேஸ்வரன் பா. உ.
8. ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி
   செயலாளர் நாயகம், அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா பா. உ. சார்பாக
   திரு சின்னதுரை தவராசா முன்னாள் பா. உ.
9. தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள்
   தலைவர், அமைச்சர் சி. சந்திரகாந்தன் பா. உ.
10. இலங்கைத் தமிரசுக் கட்சி
    தலைவர், மாவை சோ. சேனாதிராசா முன்னாள் பா. உ.
11. ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி
    தலைவர், சுரேஷ் பிரேமசந்திரன் முன்னாள் பா. உ.
12. தமிழீழ விடுதலை இயக்கம்
    தலைவர், செல்வம் அடைக்கலநாதன் பா. உ.
13. தமிழர் சமூக ஜனநாயகக் கட்சி
    தலைவர், திருநாவுக்கரசு சிறீதரன் முன்னாள் மா. ச. உ.
14. சமத்துவக் கட்சி
    தலைவர் மு. சந்திரகுமார் முன்னாள் பா. உ.
15. ஈழவர் ஜனநாயக முன்னணி
    செயலாளர் நாயகம், இராஜநாதன் பிரபாகரன்
16. ஜனநாயக மக்கள் விடுதலை முன்னணி
    பிரதிநிதி பா. கஜதீபன் முன்னாள் மா. ச. உ.,
    தலைவர் த. சித்தார்த்தன் சார்பாக.
17. அகில இலங்கை தமிழர் மகாசபை
    பிரதிநிதி, அமைச்சர் வியாழேந்திரன் பா. உ.
18. நன்றியுரை :
    அதிகாரப் பகிர்வுக்கான இயக்கம், கலாநிதி கா. விக்னேஸ்வரன்

நேரடியாக ஒலிபரப்பப்படும். அதற்கான Link
https://youtube.com/live/FE6- kQmKC4A?feature=share
தொடர்புக்கு: சிவகுரு முருகதாஸ் - 0773101462



அனுசரணை
அதிகாரப் பகிர்வுக்கான இயக்கம்
செல்வநாயகம் நினைவு அறக்கட்டளை ஆய்வு நிறுவனம்,
யாழ்ப்பாணம்.



யாழ் வீரசிங்க மண்டபத்தில்
இன்றுமுதல் 15.07.2023 - 06.08.2023 வரை

## ஆடி மாத ஆடை தள்ளுபடி

### ஆண்கள் மற்றும் பெண்களுக்கான தலை சிறந்த ஆடைகள்



திருமணப்பட்டுச் சாறிகள்
கொட்டன் சாறிகள்
சல்வார்கள்
சல்வார் துணிகள்
புத்தம் புது டொப் வகைகள்
மற்றும் சிறுவர் சிறுமிகளுக்கான ஆடை தெரிவுகள்.....

இது பிரமாண்ட ஜவுளித் துறையின் சாம்ராஜ்யம்

## இந்தியன் செலக்ஷன்

காலம்: 15.07.2023 - 06.08.2023
இடம் : வீரசிங்கம் மண்டபம் - யாழ்ப்பாணம்
(ஞாயிற்றுக்கிழமைகளிலும் திறந்திருக்கும்)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கொடுப்பனவு



முதியோர்களுக்கான தேசிய செயலகத்தால் சுயதொழில் கொடுப்பனவாக நுணாவில் மத்தி முதியோர் சங்கத்தைச் சேர்ந்த இரண்டு முதியவர்களுக்கு கோழி வளர்ப்புக்காக தலா 50 ஆயிரம் ரூபா பெறுமதியான காசோலைகள் பிரதேச செயலர் திருமதி உஷா சுபலிங்கத்தால் கடந்த 10ஆம் திகதி திங்கட்கிழமை வழங்கப்பட்டது. (ய 9)

## உயிர்காக்கும் பயிற்சி



யாழ்.மாவட்டச் செயலகம் மற்றும் இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களம் இணைந்து நடத்திய உயிர்காக்கும் பயிற்சி கடந்த 27ஆம் திகதி செவ்வாய்க்கிழமை யாழ்.மாவட்டச் செயலகத்தில் மாவட்டச் செயலர் அம்பலவாணர் சிவபாலசுந்தரன் தலைமையில் நடைபெற்றது. (ய-66)



## இலங்கையில் சுப்பர் ஸ்டார்!

கொழும்பு, ஜூலை 15

தென்னிந்தியத் திரையுலகின் சுப்பர் ஸ்டார் என்று அழைக்கப்படும் ரஜினிகாந்த் நேற்று இலங்கைக்கு வந்துள்ளார். இலங்கை ஊடாக மாலைதீவுக்குச் செல்வதற்காக சில மணி நேரம் ரஜினிகாந்த் கட்டுநாயக்க விமான நிலையத்தில் தங்கியிருந்துள்ளார். அவருக்கு விமான நிலையத்தின் சிறப்பு அதிதிகள் முனையத்துக்கு அழைத்து விசேட வரவேற்பும் வழங்கப்பட்டுள்ளது. (ம-22)


## பழைய மரத்தூண்கள், கதவுகள் தேவை





பழமையான அலங்கார வேலைப்பாடுகளுடன் கூடிய மரத்தூண்கள், கதவுகள், கதவுக்கைபிடிகள் தேவை.

தொடர்புக்கு 0771209998

## வேலையாட்கள் தேவை

சாவகச்சேரி விக்னேஸ்வரா களஞ்சியத்தில் மற்றும் வாகனத்தில் பொருட்கள் விநியோகம் செய்வதற்கு வேலையாட்கள் தேவை.
சாவகச்சேரியில் வசிப்பவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.
சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.
தொடர்பு : 021 227 0355 (ce.37261) (N.1)

## பதவி வெற்றிடங்கள்

இல: 555, நாவலர் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம். என்னும் முகவரியில் அமைந்துள்ள ஸ்ரீ மாருதி பதிப்பகத்திற்கு பின்வரும் பதவி வெற்றிடங்களுக்கு வேலை முன் அனுபவம் உள்ளவர்கள் மற்றும் பழக விரும்புபவர்கள் தேவை.

1. கணனி வடிவமைப்பாளர் (பெண்கள்)
2. புத்தகம் கட்டுனர்
3. இயந்திர இயக்குநர்கள்(Offset)

தொடர்புக்கு :- 077 791 7680

## தேவை

கோண்டாவில் பகுதியிலுள்ள வீடு ஒன்றுக்கு வீட்டு வேலைகள் செய்வதற்குப் பணிப்பெண் தேவை.

- ☑ மாதம் ரூபா 50000 இற்கு மேற்பட்ட கவர்ச்சிகரமான சம்பளம்.
- ☑ தங்குமிட வசதியுண்டு. (மூன்று வேளைக்கான உணவு வழங்கப்படும்)
- ☑ தங்கி வேலை செய்யாவிடில் காலை 7.00 மணி தொடக்கம் மாலை 6.00 மணிவரை வேலை செய்ய வேண்டும்.

077 477 9444


## மரண அறிவித்தல்

| தோற்றம் | | மறைவு |
|---|---|---|
| 26 - 02 - 1945 |  | 14 - 07 - 2023 |

### தம்பு தியாகராஜா

பொன்னையா வீதி. வண் - வட. மேற்கு ஆறுகால்மடத்தை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட தம்பு தியாகராஜா நேற்று (14.07.2023) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தம்பு செல்லமுத்து தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான கந்தையா ரோகினி தம்பதிகளின் அன்பு மருமகனும், காலஞ்சென்ற இறஞ்சிதமலரின் பாசமிகு கணவரும், சர்மிலன், சர்வீதரன், சரண், சர்மிளா ஆகியோரின் அன்பு தந்தையும், சரவணபவன், யோகநிதி, ரூபநிதி, றேனுகா ஆகியோரின் மாமனாரும், றொஷானா, பபிஷேக், கவின்ஷா, ஸஷ்விந், சரூண் ஆகியோரின் பேரனும், காலஞ்சென்றவர்களான சுந்தரம், செல்லையா, நல்லையா, தம்பித்துரை, செல்வராசா மற்றும் மகேஸ்வரி ஆகியோரின் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (16.07.2023) ஞாயிற்றுக்கிழமை காலை 8.00 மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக முற்பகல் 10.00 மணியளவில் கோம்பயன் மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: குடும்பத்தினர்
077 9040 413
077 8649 163

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# வீதியில் நெஞ்சுவலி: திருமலை நபர் பலி!

யாழ்ப்பாணம், ஜூலை 15

வீதியால் சென்றுகொண்டிருந்தபோது நெஞ்சுவலி ஏற்பட்டு சிகிச்சைக்காகக் கொண்டு செல்லப்பட்டவர் உயிரிழந்தார். தெல்லிப்பழைப் பகுதியில் நேற்றுமுன்தினம் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

வடமராட்சி கிழக்கு, குடாரப்பு பகுதியில் கடலட்டைத் தொழிலை மேற்கொண்டு வரும் திருகோணமலையைச் சேர்ந்த தௌப்பிக் முகமட் தாரிஸ் (வயது-44) என்பவரே உயிரிழந்தவராவார். அவர் தெல்லிப்பழை நோக்கி தனது நண்பனுடன் மோட்டார் சைக்கிளில் சென்று கொண்டிருந்தபோது நெஞ்சு வலியால் அவதிப்பட்ட நிலையில் தெல்லிப்பழை மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார். எனினும் அவர் முன்னதாகவே உயிரிழந்துவிட்டமை மருத்துவப் பரிசோதனையில் உறுதிப்படுத்தப்பட்டது. பருத்தித்துறை மரண விசாரணை அதிகாரி சதானந்தம் சிவராஜா விசாரணைகளை மேற்கொண்டு உடற்கூற்றுப் பரிசோதனைக்கு உத்தரவிட்டார். (ம-26)

# றொக்கர்ஸ் - சுப்பர் கிங்ஸ் இறுதியாட்டத்தில் மோதல்!

யாழ்ப்பாணம், ஜூலை 15

தென்மராட்சி மெகா பிறீமியர் லீக் தொடரின் இறுதியாட்டத்தில், நுணாவில் றொக்கர்ஸ் மற்றும் கைதடி சுப்பர் கிங்ஸ் அணிகள் இன்று பிற்பகல் பலப்பரீட்சை நடத்தவுள்ளன.

ரி.எம்.பி.எல். (தென்மராட்சி மெகா பிறீமியர் லீக்) இம்முறை மூன்றாவது வருடமாக நடைபெற்ற நிலையில், அதன் இறுதியாட்டம் மட்டுவில் வளர்மதி விளையாட்டுக்கழக மைதானத்தில் இன்று பிற்பகல் 2.30 மணிக்கு இடம்பெறவுள்ளது. இந்த ஆட்டத்திலேயே நுணாவில் றொக்கர்ஸ் மற்றும் கைதடி சுப்பர் கிங்ஸ் அணிகள் மோதவுள்ளன. ரி.எம்.பி.எல். அமைப்பின் தலைவர் சஜிதரன் தலைமையில் இடம்பெறவுள்ள பரிசளிப்பு நிகழ்வில், பிரதம விருந்தினராக நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் ஈ.சரவணபவன் கலந்துகொள்ளவுள்ளார். (ம)

# போதைப் பொருள்களுடன் நான்கு இளைஞர்கள் கைது

*யாழ்ப்பாணம், ஜூலை 15*

*உயிர்கொல்லிப் போதைப்பொருள்களுடன் நான்கு இளைஞர்கள் யாழ். மாவட்ட பொலிஸ் புலனாய்வுப் பிரிவினரால் நேற்று வெள்ளிக்கிழமை மாலை கைது செய்யப்பட்டுள்ளனர்.*

*உரும்பிராய் - புதிய செம்மணி வீதிப்பகுதியில் வைத்தே அவர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளனர். கைதுசெய்யப்பட்ட சந்தேக நபர்கள் 18, 19, 21, 22 வயதுடையவர்கள். அவர்களிடம் இருந்து 40 போதை மாத்திரைகளும், ஒரு கிராம் 40 மில்லிகிராம் கஞ்சாவும், குறிப்பிடத்தக்களவு ஹெரோய்னும் கைப்பற்றப்பட்டன.*

*சந்தேகநபர்கள் கோப்பாய் பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ள நிலையில், அவர்களிடம் மேலதிக விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. (ம-125,26)*

# வவுனியாவில் கைக்குண்டு!



வவுனியா, ஜூலை 15

வவுனியா, தோணிக்கல் பகுதியில் நேற்று வெள்ளிக்கிழமை கைக்குண்டு ஒன்று மீட்கப்பட்டுள்ளதாக வவுனியா பொலிஸார் தெரிவித்தனர்.

தோணிக்கல், லக்ஸ்சபான வீதியில் பராமரிப்பு அற்ற காணியொன்றில் சிரமதானப்பணிகளைமேற்கொண்ட போதே இந்தக் கைக்குண்டு அவதானிக்கப்பட்டது. இது தொடர்பில் பொலிஸாருக்குத் தெரியப்படுத்தப்பட்டதைத் தொடர்ந்து சம்பவ இடத்துக்கு வந்த பொலிஸார் அதை அப்புறப்படுத்தும் நடவடிக்கைகளை முன்னெடுத்தனர். (ம-110,18)

## *யாழ்....*

பகுதி, எதிர்வரும் 19, 20 மற்றும் 21ஆம் திகதிகளில் நடைபெறவுள்ளது.

இது தொடர்பாக ஊடகங்களுக்கு விளக்கமளிக்கும் செய்தியாளர் சந்திப்பு நேற்றுக் காலை யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் சி.சிறிசற்குணராஜா தலைமையில் இடம்பெற்றது. இந்தச் சந்திப்பில் பட்டமளிப்பு விழாக் குழுவின் தலைவரும், கலைப் பீடாதிபதியுமான பேராசிரியர் சி.ரகுராம், பல்கலைக்கழகப் பதிவாளர் வி.காண்டீபன், கல்வி விவகாரங்கள் மற்றும் வெளியீட்டுக் கிளையின் உதவிப் பதிவாளர் எஸ்.கே.பிரபாகரன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

பட்டமளிப்பு விழாக்குழுத் தலைவர் பேராசிரியர் சி.ரகுராம் பட்டமளிப்பு விழா தொடர்பில் விளக்கமளித்தார். அங்கு அவர் வழங்கிய ஊடக விவரிப்பில் குறிப்பிட்ட விடயங்கள் வருமாறு:-

பல்கலைக்கழக உள்ளக விளையாட்டரங்கில் எட்டு அமர்வுகளாக நடைபெறவுள்ள இந்தப் பட்டமளிப்பு விழாவை யாழ்ப்பாணப் பல்கலைக்கழக வேந்தர், வாழ்நாள் பேராசிரியர் சி.பத்மநாதன் தலைமை தாங்கி, பட்டங்களையும், தகைமைச் சான்றிதழ்களையும், தங்கப் பதக்கங்களையும், புலமைப் பரிசில்களையும் வழங்கிக் கௌரவிக்கவுள்ளார்.

இந்தப் பட்டமளிப்பு விழாவில், உயர்பட்டப் படிப்புகள் பீடம், இணைந்த சுகாதார விஞ்ஞானங்கள் பீடம், சேர். பொன் இராமநாதன் அரங்காற்று மற்றும் கட்புலக் கலைகள் பீடம், கலைப்பீடம், பொறியியல் பீடம், விஞ்ஞான பீடம், விவசாய பீடம், முகாமைத்துவக் கற்கைகள் மற்றும் வணிக பீடம், மருத்துவ பீடம், தொழில்நுட்பப் பீடம், இந்துக் கற்கைகள் பீடம், சித்த மருத்துவ அலகு மற்றும் வவுனியா வளாகத்தைச் (தற்போதைய வவுனியா பல்கலைக்கழகம்) சேர்ந்த வியாபாரக் கற்கைகள் பீடம், பிரயோக விஞ்ஞான பீடம் மற்றும் தொழில்நுட்பக் கற்கைகள் பீடங்களைச் சேர்ந்த பட்டதாரிகளுக்கும், யாழ். பல்கலைக்கழக திறந்த மற்றும் தொலைக்கல்வி நிலையத்தினால் வழங்கப்படும் வெளிவாரிப் பட்டங்களைப் பெறும் பட்டதாரிகளுக்கும் பட்டங்கள் வழங்கப்படவுள்ளன. இந்தப் பட்டமளிப்பு விழாவில் 162 பட்டப்பின் தகைமை பெற்றவர்களுக்கும், ஆயிரத்து 885 உள்வாரி மாணவர்களுக்கும், 166 வெளிவாரி மாணவர்களுக்கும் பட்டங்கள் வழங்கப்பட இருப்பதுடன், 65 உயர் தகைமை மற்றும் தகைமைச் சான்றிதழ்களும் வழங்கப்படவுள்ளன.

மேலும், இந்தப் பட்டமளிப்பு விழாவில் சகல பட்டக் கற்கைநெறிகளுக்குமாக 32 தங்கப்பதக்கங்களும், 10 புலமைப் பரிசில்களும், 25 பரிசில்களும் வழங்கப்பட இருக்கின்றன. மேலும், ஒவ்வொரு வருடமும் பல்கலைக்கழகத்தால் வழங்கப்படும் மதிப்புமிக்க பேராசிரியர் அழகையா துரைராசா தங்கப்பதக்கத்தை பீடமட்டத்தில் முகாமைத்துவக் கற்கைகள் மற்றும் வணிக பீடம், கலைப் பீடம் மற்றும் மருத்துவபீடத்தைச் சேர்ந்த மூவரும், பல்கலைக்கழக மட்டத்தில் விஞ்ஞான பீடத்தைச் சேர்ந்த ஒருவரும் பெறவிருக்கின்றமை குறிப்பிடத்தக்கது.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் அமைக்கப்பட்டு 50ஆவது வருடத்தில் நடைபெறவுள்ள பொன்விழா நிகழ்வுகளின் ஆரம்ப நிகழ்வாக இந்தப் பட்டமளிப்பு விழா இடம்பெறவிருக்கின்றமை குறிப்பிடத்தக்கதாகும் என்று அந்த விவரிப்பில் உள்ளது. (அ-ம,26,27,125)

## *அரசாங்கத்தில்...*

இருப்பதற்குப் பொருத்தமற்ற ஒருவரே சரத் வீரசேகர என தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்புகள் அமைச்சர் மனுஷ நாணயக்கார தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்தில் நேற்று இடம்பெற்ற ஊடக சந்திப்பின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

சரத் வீரசேகர போன்றவர்கள் அரசாங்கத்தில் அங்கம் வகிக்கத் தகுதியற்றவர்கள். இவர்களையெல்லாம் கொண்டுதான் இந்த அரசாங்கம் இயங்குகின்றது. ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இது குறித்த தெளிவில் இருக்கின்றார். வடக்கிலும் தெற்கிலும் இனவாதக் கருத்துகளை பேசுபவர்கள் முதலில் அதனை நிறுத்தவேண்டும். குறிப்பாக இனவாத கருத்தைக்கொண்ட சரத் வீரசேகர போன்றவர்கள் தமது மனநிலையை மாற்றவில்லையெனில் எமது நாடு 2047ஆம் ஆண்டளவில்கூட அபிவிருத்தி அடையாத நாடாகவே காணப்படும்.

நான் தமிழ்மொழி பேசாதமை எனது குற்றமல்ல. எமது மூதாதையர்கள் ஆற்றிய பிழையே ஆகும். 1956 ஆம் ஆண்டு தனிச்சிங்களச் சட்டம் கொண்டு வரப்பட்டது. அதனைத் தேசிய மொழியாக அங்கீகரித்து பிறமொழிகளை புறக்கணித்தார்கள். இதன்மூலம் எம்மால் ஏனைய மொழிகளைக் கற்க முடியாது போனது. எமது நாட்டின் இனப் பிரச்சினை தொடர்வதற்கு இதுவும் ஒரு காரணமாகும். மனித உரிமைசார் பிரச்சினைகளைநாம் இழுத்தடித்துக்கொண்டு செல்லமுடியாது, அதனை முடிவுக்குக் கொண்டுவரவேண்டும். அத்துடன், வடக்கு - கிழக்குப் பகுதிகளில் காணிகளை விடுவிப்பது தொடர்பில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தற்போது கவனம் செலுத்தி வருகின்றார் - என்றார். (அ-ம-125)

## *கெஹலியவுக்கு...*

தொடர்பில் பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி ஆராய்ந்து வருகின்றது.

தரமற்ற மருந்துகள் மற்றும் மருத்துவப் பொருள்கள் இறக்குமதி உட்பட சுகாதாரத் துறையில் எழுந்துள்ள முக்கியமான சில பிரச்சினைகளை அடிப்படையாகக் கொண்டே இந்தப் பிரேரணை முன் வைக்கப்படவுள்ளது.

நாட்டில் கடந்த சில நாள்களாக பதிவான சில மரணங்கள் தொடர்பில் சர்ச்சை எழுந்துள்ளது. இவ்வாறான சம்பவங்கள் சுகாதாரத்துறைக்குப் பெரும் அச்சுறுத்தல் என எதிரணிகளும், சுகாதாரத் தொழிற்சங்கங்களும் சுட்டிக்காட்டி வருகின்றன. அத்துடன் சுகாதார அமைச்சரையும், அமைச்சின் செயலாளரையும் பதவி விலகுமாறும் வலியுறுத்தப்படுகின்றன. இந்த நிலையிலேயே சுகாதார அமைச்சருக்கு எதிராக நம்பிக்கையில்லாத் தீர்மானத்தைக் கொண்டுவருவதற்கு ஐக்கிய மக்கள் சக்தி ஆராய்ந்து வருகின்றது. (அ-ம-44)

## *10 கிலோ...*

அவரைக் கைதுசெய்துள்ளனர்.

யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்பு நோக்கிப் பயணித்த பேருந்து ஒன்றில் கேரளக் கஞ்சா கடத்தப்படுகின்றது என்று வவுனியா பொலிஸாருக்குக் கிடைத்த இரகசியத் தகவலுக்கு அமைவாக மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளின் அடிப்படையிலேயே இந்தக் கைது முன்னெடுக்கப்பட்டது.

கைதானவரிடம் மேற்கொள்ளப்பட்ட முதற்கட்ட விசாரணைகளின் அடிப்படையில் அவர், முழங்காவிலில் உள்ள இராணுவ முகாமில் பணியாற்றி வருபவர் என்று தெரியவந்துள்ளது. மேலதிக விசாரணைகளின் பின்னர் நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்த பொலிஸார் நடவடிக்கைகளை மேற்கொண்டனர். (அ-ம-22,110)

## *அரசின்...*

பிக்குகள் தலைமையிலான காடையர்களாலும் நேற்று மேற்கொள்ளப்பட்ட அடக்குமுறைகள் மற்றும் பலப்பிரயோகங்கள் தொடர்பில் கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

எங்களுடைய இடத்தில் எமது மக்கள், தமது வழிபாட்டினை மேற்கொள்ளமுடியாத நிலை காணப்படுகிறது. நாம் பொங்கல் வழிபாடுகளுக்குரிய ஏற்பாடுகளை முன்னெடுத்திருந்தபோது, பெரும்பான்மை இனத்தவர்களும், பௌத்த தேரர்களும் எமது பொங்கல் வழிபாட்டுக்குரிய செயற்பாடுகளைக் குழப்புகின்ற வகையில் செயற்பட்டனர். அங்கு கடமையிலிருந்த பொலிஸார் வெறுமனே வேடிக்கை பார்த்துக்கொண்டிருந்ததை அவதானிக்கக்கூடியவாறு இருந்தது. அத்துடன்வழிபாடுகளைநாம்மேற்கொள்ள முடியாதபடி பொலிஸார் இன்று பலப் பிரயோகத்தை மேற்கொண்டுள்ளனர். இதுபோன்ற சம்பவங்கள் தொடர்ந்து பலதடவைகள் இந்த நாட்டிலே நடைபெற்றிருக்கின்றன. இருப்பினும் சர்வதேசநாடுகள்கூட தொடர்ந்தும் இவற்றை வெறுமனே பார்த்துக்கொண்டுதான் இருக்கின்றன. இவ்வாறான கொடுமையான அரசாங்கத்தின் கீழ்தான் எமது மக்கள் வாழ்கின்றார்கள் என்பதை உலக நாடுகள் உணர்ந்துகொள்ளவேண்டும். நாம் இதனை இவ்வாறே விட்டுவிடப் போவதில்லை. தொடர்ந்தும் இங்கு வந்து வழிபாடுகளை மேற்கொள்வோம் - என்றார். (அ-ம-246)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## குருந்தூர்மலையில்...

**பொங்கலுக்குத் தடை**

முல்லைத்தீவு - குருந்தூர்மலை ஆதி சிவன் ஐயனார் ஆலயத்தில் நீதிமன்ற அனுமதியைப் பெற்று நேற்றையதினம் பொங்கல் மேற்கொள்வதற்கான முன்னேற்பாடுகள் இடம்பெற்றன. இதற்காகத் தமிழ் மக்களும் தமிழ் மக்கள் பிரதிநிதிகளும் குருந்தூர்மலைக்குச் சென்றபோது, பிக்குகள் தலைமையிலான பெருமளவு சிங்களவர்கள் அங்கு ஒன்று திரண்டு தமிழர்களின் வருகைக்கும் அவர்களின் வழிபாட்டுக்கும் கடும் எதிர்ப்பை வெளியிட்டனர். தமிழ் மக்கள் நீதிமன்றத்தின் உத்தரவைக் காண்பித்து, தாம் வழிபாட்டுக்காக வந்துள்ளதாகத் தெரிவித்தபோதிலும் அவர்களின் கருத்தை ஏற்க மறுத்த சிங்களவர்கள் தொடர்ந்து தர்க்கத்தில் ஈடுபட்டதையடுத்து இருதரப்புக்கும் இடையில் வாக்குவாதம் முற்றியது. இதையடுத்து தொல்பொருள் திணைக்களப் பிரதிநிதியொருவர் முன்னிலையாகி, இது தொல்பொருள்கள் இருக்கும் இடம். ஆதலால், இங்கு தீமூட்டி பொங்கல் பொங்க முடியாது என்று சுட்டிக்காட்டினார். பொங்கல் வழிபாட்டை மேற்கொள்ள முடியாது என்றால், அதை எழுத்துமூலம் தெரிவியுங்கள் என்று தமிழ் அரசியல் பிரதிநிதிகள் தெரிவித்ததை அடுத்து, பொங்கலை மேற்கொள்வதாயின், நிலத்தில் தகரம்வைத்து, அதன்மேல் கல் வைத்தே மேற்கொள்ள முடியும் என்று அவர் 'சுருதியை' மாற்றினார். அவர் குறிப்பிட்டதைப்போன்று பொங்கலை மேற்கொள்ள முன்னேற்பாடுகள் இடம்பெற்ற நிலையில், மீண்டும் சிங்கள இனவாதத் தரப்பினரும், பிக்குகளும் ரகளையில் ஈடுபட்டனர். இதனால் மீண்டும் பதற்றம் ஏற்பட்டது.

**பொலிஸார் பலப்பிரயோகம்**

இதன்போது முல்லைத்தீவுப் பொலிஸார் அடாத்தாகச் செயற்பட்டு பொங்கலுக்காகச் செய்யப்பட்ட ஏற்பாடுகளை சிதைத்தனர். பொலிஸ் அதிகாரியொருவர் சப்பாத்துக் காலால் பொங்கலுக்காக ஏரிக்கப்பட்ட கற்பூரத்தீபத்தை அணைத்தார். மலைக்குக் கீழே பொங்கி, பொங்கலை எடுத்து வந்து மேலே படையல் செய்யலாம் என பொலிஸார் கடுமையான நிபந்தனை விதித்தனர். எனினும், தமிழ் மக்கள் அதை ஏற்கவில்லை. குருந்தூர்மலையில் தமக்குள்ள வழிபாட்டு உரிமையைச் சுட்டிக்காட்டினர். எனினும், பொலிஸார் பொங்கலுக்கு அனுமதியளிக்கவில்லை. பொலிஸ் விசேட அதிரடிப்படையினர் அங்கு குவிக்கப்பட்டனர். பின்னர் பொங்கலுக்குச் சென்ற தமிழ்த் தரப்பினர் அனைவரையும் மலையிலிருந்து கீழே இறங்கிச் செல்லுமாறு பொலிஸார் கட்டளையிட்டனர். குருந்தூர்மலையிலிருந்து சிங்களவர்களையும் கீழிறக்கினால்தான் தாம் கீழிறங்குவோம் என்று தமிழர் தரப்புத் தெரிவித்ததையடுத்து, பொலிஸார் பலப்பிரயோகம் மேற்கொண்டு தமிழர்களை வெளியேற்றினார்கள். சிலர் தள்ளி விழுத்தப்பட்டனர். இதனால், பலர் காயமடைந்தனர். (அ-ம-19,246)

## வடக்கு...

அமைச்சர் மனுஷ நாணயக்கார தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்தில் உள்ள வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தில் நேற்று வெள்ளிக்கிழமை இடம்பெற்ற விசேட ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

யாழ்ப்பாணம் மாவட்டத்தில் வெளிநாட்டு வேலைவாய்ப்புக்களுக்காகச் செல்வோருக்கான தொழிற்பயிற்சி நிலையமொன்று அமைக்கப்படவுள்ளது. இதற்காக காணியொன்றை வழங்குமாறு யாழ்ப்பாணம் மாவட்டச் செயலரிடம் நான் கோரிக்கையை முன்வைத்துள்ளேன். இந்த நிலையம் அமைக்கப்பட்டதன் பின்னர் வடக்கிலிருந்து வெளிநாட்டு வேலைவாய்ப்புக்களுக்காகச் செல்பவர்கள் மிகமிக இலகுவாக பயிற்சிகளைப் பெற்றுக்கொண்டு செல்ல முடியும். அத்துடன் இந்தத் தொழிற்பயிற்சி மையத்தில் ஊடக மையமொன்றும் அமைக்கப்பட்டு ஊடகவியலாளர்களின் பிரச்சினைகள் தொடர்பிலும் கவனம் செலுத்தப்படும்.

மேலும் தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சின் நடமாடும் சேவையான 'க்ளோகல் பெயார் 2023' இன்று, நாளை மற்றும் நாளைமறுதினம் என்று மூன்று தினங்கள் யாழ்ப்பாணம் முற்றவெளி விளையாட்டரங்கில் இடம்பெறவுள்ளது. இதன்மூலம் ஆள் கடத்தலை தடுக்கவும், பல்வேறு கடத்தல்களில் சிக்குபவர்களைத் தடுக்கவும், தொழில் வாய்ப்புகளுக்கான பயிற்சி பெற்றாதவர்களுக்குப் பதிலாக பயிற்சி பெற்றவர்கள் வெளிநாட்டு வேலைகளுக்குச்செல்லவும், வெளிநாட்டுதொழில் வாய்ப்புகளுக்குத் தேவையான விழிப்புணர்வு வசதிகளை ஏற்படுத்தவும் முடியும். அவற்றை இலக்காகக் கொண்டே நாம் செயற்பட்டு வருகிறோம்.

கொழும்புக்கு வந்து எமது அமைச்சின் மூலம் நீங்கள் பெற்றுக்கொள்ளக்கூடிய அனைத்துச் சேவைகளையும், நீங்கள் கொழும்புக்கு வராமல் யாழ்ப்பாணத்திலேயே பெற்றுக்கொள்ளுவதற்கான வாய்ப்பை உங்களுக்கு வழங்குகின்றோம்.

ஊழியர் சேமலாப நிதி, ஊழியர் நம்பிக்கை நிதி தொடர்பான பிரச்சினைகள், வெளிநாட்டுத் தொழில் வாய்ப்பு தொடர்பான விடயங்கள், வெளிநாட்டலுவல்கள் அமைச்சகத்தின் தூதரகத் துறையின் சேவைகள் முதலானவற்றை ஒரே இடத்தில் பெற்றுக்கொள்வதற்கு தேவையான வசதிகள் 'க்ளோகல் பெயாரில்' செய்யப்பட்டுள்ளன - என்றார். (அ-ம-125)

## அதிகமாகச்...

என்று வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சர் மனுஷ நாணயக்கார தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

வெளிநாட்டு வேலைவாய்ப்புக்காக சட்ட விரோத பயண முறைகளின் ஊடாகப் பயணப்படுவது இன்று அதிகரித்துள்ளது. மக்கள் மத்தியில் இது தொடர்பில் விழிப்புணர்வு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவேண்டும். வடக்கு மாகாணத்தில் அனைத்துப் பொலிஸ் நிலையங்களில் வெளிநாட்டு வேலைவாய்ப்புத் தொடர்பான மோசடிகள் அதிகமாகப் பதிவாகின்றன. இதனடிப்படையில் மோசடிக்காரர்கள் குறித்து பொலிஸ் முறைப்பாட்டுக்கும், ஊடகத் தெளிவுபடுத்தலுக்கும் மேலதிகமாக எனக்கு அறிவிக்கப்படும் பட்சத்தில் இதற்குரிய நடவடிக்கைகளை நான் எடுப்பேன் - என்றார். (அ-ம-125)

## தமிழர்...

கூடாது. நீங்கள் பார்வையாளர்களாக இருந்தால் வடக்கு - கிழக்கு தமிழ்பேசும் மக்கள் சரித்திர ரீதியாக வாழ்ந்து வந்தவர்கள் என்பது அழிக்கப்பட்டு உரிமைகளை இழந்து - அபிலாஷைகளை நிறைவேற்ற முடியாமல் ஒதுங்கவேண்டிய நிலைமை ஏற்படும் - இவ்வாறு இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் நாடாளுமன்றக் குழுத் தலைவர் இரா. சம்பந்தன் தெரிவித்தார்.

இலங்கைக்கான அமெரிக்கத்தூதுவர் ஜூலி சங், இரா.சம்பந்தனை நேற்று முன்தினம் நேரில் சென்று சந்தித்தார். இந்தச் சந்திப்புத் தொடர்பில் இரா.சம்பந்தன் 'உதயன் பத்திரிகைக்கு' மேலும் தெரிவித்ததாவது:-

நேற்று (நேற்றுமுன்தினம்) வியாழக்கிழமை அமெரிக்கத் தூதுவர் என்னை வந்து சந்தித்தார். முக்கியமான விடயங்கள் தொடர்பில் கலந்துரையாடினார். நல்லதொரு சந்திப்பு. மாலை 5.30 மணி முதல் 6.45 மணி வரை என்னுடன் அவர் பேசினார். இலங்கையின் தற்போதைய நிலைமை, அரசியல் தீர்வு விடயம், தமிழ்பேசும் மக்களின் தாயகமான வடக்கு - கிழக்கு மாகாணங்களில் ஏற்படுகின்ற பல்வேறு விதமான மாற்றங்கள், தமிழ்பேசும் மக்களின் எண்ணிக்கையைக் குறைத்து தமிழ்பேசும் மக்களின் சரித்திர ரீதியான இடங்களை அழித்துவிடும் நோக்குடன் மேற்கொள்ளப்படும் முயற்சிகள், வடக்கு - கிழக்கில் இராணுவப் பிரசன்னத்தின் அதிகரிப்பு மற்றும் வடக்கு - கிழக்கு மீளிணைப்பு தொடர்பில் அவரிடம் எடுத்துரைத்தேன். இந்த நடவடிக்கைகள் ஐ.நா. மனித உரிமைகள் சபையின் தீர்மானங்கள் மற்றும் சர்வதேச ஒப்பந்தங்களுக்கு முரணானவை என்றும் அவரிடம் சுட்டிக்காட்டினேன். பொறுப்புக்கூறல் உள்ளிட்ட ஐ.நா. தீர்மானங்களின் பரிந்துரைகளை இலங்கை அரசு இன்னமும் நடைமுறைப்படுத்தாமல் அசண்டையீனமாகச் செயற்படுகின்றது என்றும் அமெரிக்கத் தூதுவரிடம் கூறினேன்.

இந்த விடயங்கள் தொடர்பில் நீங்கள் மௌனமாக - பார்வையாளர்களாக இருக்கக்கூடாது. நீங்கள் பார்வையாளர்களாக இருந்தால் வடக்கு - கிழக்கு தமிழ்பேசும் மக்கள் சரித்திர ரீதியாக வாழ்ந்து வந்தவர்கள் என்பது அழிக்கப்பட்டு உரிமைகளைஇழந்து - அபிலாஷைகளை நிறைவேற்ற முடியாமல் ஒதுங்க வேண்டிய நிலைமை ஏற்படும். எனவே, தமிழ்பேசும் மக்களுக்கு உரிய அந்தஸ்தை வழங்கவேண்டும் என்று கூறினேன்.

ஆட்சி அதிகாரங்கள் பகிர்ந்தளிக்கப்பட்டு தமிழ்பேசும் மக்கள் சுய மரியாதையுடன் - சுய கௌரவத்துடன் சகல உரிமைகளுடன் சந்தோசமாக வாழ்வதற்கு வழிவகுக்கவேண்டும் என்றும் தெரிவித்தேன். ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இந்தக் கருமங்களை நிறைவேற்றுவாரா? என்று அமெரிக்கத் தூதுவர் என்னிடம் கேட்டார். 'நானும் அவரும் 1977 ஆம் ஆண்டு நாடாளுமன்றத்துக்கு ஒன்றாக வந்தோம். அவரைப் பற்றி எனக்கு நன்கு தெரியும். அவர் துவேசவாதி அல்லர். அவருக்குப் போதிய ஆதரவு இருந்தால் இந்தக் கருமங்களை அவரால் நிறைவேற்றமுடியும் என்று தெரிவித்தேன்' - என்றார். (அ-ஒ,5,22)

## சுற்றுலாவிகளை...

தமையால் வெளிநாட்டுச் சுற்றுலாவிகளும், நெடுந்தீவைச் சேர்ந்த மக்களும், நெடுந்தீவுக்குச் செல்லும் அரச பணியாளர்களும் நேற்றுப் பெரும் சிரமங்களை எதிர்கொண்டனர்.

நெடுந்தீவுக்கான பிரதான போக்குவரத்துச் சேவையாகவுள்ள வடதாரகைப் படகு வழமையாக காலை 8 மணிக்கு புறப்படும் நிலையில், நேற்றையதினம் குறிகாட்டுவானிலிருந்து காலை 7.30 மணிக்குப் புறப்பட்டுள்ளது. நெடுந்தீவு பிரதேச செயலகத்தில் நேற்று நடைபெற்ற ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்துக்காகவே இவ்வாறு முற்கூட்டியே படகு புறப்பட்டுச் சென்றுள்ளது. படகு முற்கூட்டியே புறப்படுவது தொடர்பில் உரிய முன்னறிவித்தல்கள் வழங்கப்படாமையால் நெடுந்தீவுக்குச் செல்ல வந்த பலரும் சிரமங்களை எதிர்கொண்டனர்.

இதேவேளை - யாழ்ப்பாணத்திலிருந்து குறிகாட்டுவானுக்குச் செல்லும் பேருந்தும் நேற்று அதிகாலை அரை மணி நேரம் முன்பதாகவே புறப்பட்டுச் சென்றமையால், தீவகப் பகுதிகளுக்கு கடமைக்குச் செல்லும் ஆசிரியர்களும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

'கூட்டத்துக்கு அதிகாரிகளை அழைத்துச் செல்வதென்றால் விசேட படகை அமர்த்தியிருக்கலாம். இலவச சேவையை நம்பி வந்த மக்கள் உணவுகூட உட்கொள்ளமுடியாது காத்திருக்கின்றார்கள். பஸ் காசுடன் வருகை தந்து இலவச படகு சேவையை நம்பியிருந்தால் எமது நிலைமை இப்படித்தான்' என்று நெடுந்தீவுவாசி ஒருவர் தெரிவித்தார்.

'அரச பணியாளர்கள் சிலர் வாடகைக்கு ஒரு படகை அமர்த்திச் செல்கின்றார்கள். நாங்கள் அவ்வாறு செல்லமுடியாததால் வீடு திரும்பவேண்டிய சூழலே ஏற்பட்டுள்ளது' என்று நெடுந்தீவைச் சேர்ந்த இன்னொருவர் குறிப்பிட்டார்.

'நெடுந்தீவின் அழகை இரசிப்பதற்காக மிகவும் ஆர்வத்துடன் வந்தேன். ஆனால் நான் ஏமாற்றப்பட்டுவிட்டேன். இன்றுடன் (நேற்று) எனது யாழ்ப்பாணப் பயணம் முடிவடைகிறது. நெடுந்தீவைப் பார்க்காமல் கவலையுடன் மீளத் திரும்புகின்றேன்' என்றார் லண்டனைச் சேர்ந்த சுற்றுலாவியான ஷைலா.

'நானும் எனது கணவன் மற்றும் மகன் மூவரும் பேருந்தில் வந்தோம். இங்கு வருவதற்கு 10 நிமிடங்களுக்கு முன்னர் படகு புறப்பட்டுவிட்டது. எமக்கு படகு நேர மாற்றம் தொடர்பில் அறிவித்தல் தெரியாமையால் நாம் நெடுந்தீவு செல்லாமலேயே மீளவும் திரும்பவேண்டி ஏற்பட்டுள்ளது' என்று ஹொங்கொங்கைச் சேர்ந்த சுற்றுலாவியான ஸ்டெவ்னி தெரிவித்தார்.

வடதாரகைப் படகுச் சேவைக்குப் பொறுப்பான வீதி அபிவிருத்தி அதிகார சபையின் வடக்கு மாகாணப் பணிப்பாளரைத் தொடர்புகொண்டபோது, 'நேர அட்டவணை வழங்குவது சம்பந்தப்பட்ட பிரதேச செயலரே' என்று குறிப்பிட்டார்.

நெடுந்தீவுப் பிரதேச செயலர் தற்போது வெளிநாடு ஒன்றுக்குச் சென்றுள்ள நிலையில், வேலணைப் பிரதேச செயலரே பதில்கடமை புரிந்து வருகின்றார். அவரைத் தொடர்புகொண்டு கேட்டபோது, ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தைக் கருத்திற்கொண்டு நேர அட்டவணை மாற்றப்பட்டது என்றும் இது நெடுந்தீவுப் பகுதி மக்களுக்குரிய பிரச்சினை என்பதால், நெடுந்தீவு இறங்குதுறையில் இந்த அறிவித்தல் காட்சிப்படுத்தப்பட்டது என்றும் தெரிவித்தார்.

நெடுந்தீவு பிரதேச செயலகத்தால் படகு நேரமாற்றம் தொடர்பில் உரியமுறையில் முற்கூட்டியே மக்களுக்கு அறிவிக்கப்பட்டிருக்கவில்லை. நெடுந்தீவு பிரதேச செயலரின் கையெழுத்துடன் நெடுந்தீவைச் சேர்ந்த இணையமொன்றில் மாத்திரமே நேர மாற்றம் தொடர்பான தகவல் வெளியிடப்பட்டுள்ளது. மக்களுக்குச் சென்றடையும் வகையில் அதனை வெளியிட்டிருந்தால் இவ்வாறானதொரு நிலைமை ஏற்பட்டிருக்காது என்று பலரும் சுட்டிக்காட்டினர்.

(அ-ஓ,125)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பெயர் மாற்றம்

இதுவரை காலமும் 4/2 ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி வடக்கு, யாழ்ப்பாணத்தில் இயங்கி வந்த வலுவிழுந்தோர் புனர்வாழ்வுச் சங்கமானது 04.05.2023 திகதி தொடக்கம் மாற்றுத் திறனாளிகள் புனர்வாழ்வுச் சங்கம் என பெயர் மாற்றப்பட்டுள்ளது என்பதை அறியத்தருகின்றோம்.

நிர்வாக சபை,
மாற்றுத் திறனாளிகள் புனர்வாழ்வுச் சங்கம்.

(cs 51245) (N.1)

## மணமகள் தேவை

01. புங்குடுதீவு. இந்து. கௌரவகுலம் (V) 1985. சதயம். MSc in Computer Science (USA) அமெரிக்கா Citizen மணமகனுக்கு மணமகள் தேவை. பதிவெண் - 27327
02. கொக்குவில். இந்து. கௌரவகுலம் (V) 1988. அனுசம். MBBS Doctor, Jaffna Hospital மணமகனுக்கு மணமகள் தேவை. பதிவெண் - 27295
03. வட்டுக்கோட்டை. இந்து. கௌரவகுலம் (V) 1989. திருவாதிரை. MBBS, FLAB 1, and FLAB 2 Passed இலங்கையில் Doctor ஆக இருக்கும் மணமகனுக்கு மணமகள் தேவை. பதிவெண் - 27482
04. கரம்பொன்-திருநெல்வேலி. இந்து. கௌரவகுலம் (V) 1986. மிருகசீரிடம். BSc in Quantity Surveyoring (UK), DUBAI இல் வேலை செய்து கொண்டிருக்கும் மணமகனுக்கு மணமகள் தேவை. பதிவெண் - 27786
05. பொலிகண்டி - கரவெட்டி. இந்து கௌரவகுலம் (V) 1986. பூரம். BSc UK Citizen Divorce மணமகனுக்கு மணமகள் தேவை. பதிவெண் - 27669
06. காரைநகர். இந்து கௌரவகுலம் (V) 1975. விசாகம் MSc Ranning His Own Business, UK Citizen மணமகனுக்கு மணமகள் தேவை. பதிவெண் - 25104
07. நயினாதீவு. இந்து கௌரவகுலம் (V) 1981. ரோகினி. MSc IT / Consultant, UK Citizen மணமகனுக்கு மணமகள் தேவை. பதிவெண் - 25041

தொடர்புகளுக்கு- S.Sharma J.P Astrologer
Whatsapp - 077 803 8193
போன் - 077 539 3728

## காணி விற்பனைக்கு உண்டு

யாழ்ப்பாணம் நாவற்குழியில் 15 பரப்புக்காணி விற்பனைக்குண்டு.

**(நிலப்பரப்பு)**

* நாவற்குழி சந்தியிலிருந்து 200 M
* A32 பிரதான வீதியிலிருந்து இரண்டாவது காணி
* 33 அடிப்பாதையுடன்
* தொழிற்சாலை, களஞ்சியசாலை, வீடுகள் அமைப்பதற்கு உகந்த இடம்
* நன்னீரூற்று
* சுற்றுப்புறம் குடியிருப்பு உள்ளது.

தொடர்பு:-
**0777 840 379**
**Whatsapp 0740 214 111**

(CS 25529) A-1

## மணமகன் தேவை

01. நயினாதீவு - கரணவாய், இந்து கௌரவகுலம் (V), 1998, உத்தி ரட்டாதி, BSc, மணமகளுக்கு மணமகன் தேவை, பதிவெண் -34680
02. புலோலி - சாவகச்சேரி, இந்து கௌரவகுலம் (V), 1990, பூரம், MBBS Doctor மணமகளுக்கு மணமகன் தேவை. பதிவெண் - 34688
03. புங்குடுதீவு, இந்து கௌரவகுலம் (V), 1991, கார்த்திகை, BA, Accountant, France Citizen மணமகளுக்கு மணமகன் தேவை. பதிவெண் - 34649
04. பருத்தித்துறை, இந்து கௌரவகுலம் (V), 1994, உத்தரம், MBBS Doctor மணமகளுக்கு மணமகன் தேவை. பதிவெண் - 34635
05. அரியாலை - தெல்லிப்பளை, இந்து கௌரவகுலம் (V), 1994, பூராடம், MBBS Doctor Norway Citizen மணமகளுக்கு மணமகன் தேவை. பதிவெண் - 34889
06. தொல்புரம், இந்து கௌரவகுலம் (K), 1995, ரேவதி, MBBS Doctor Jaffna Hospital மணமகளுக்கு மணமகன் தேவை. பதிவெண் - 34642
07. சுண்டுக்குழி - சுன்னாகம், இந்து கௌரவகுலம் (V), 1986, பூரட்டாதி, MBBS Doctor, UK Citizen மணமகளுக்கு மணமகன் தேவை. பதிவெண் - 33397
08. சாவகச்சேரி - தாவடி, இந்து கௌரவகுலம் (V), 1989, சதயம், MBBS, Masters in Surgery Doctor மணமகளுக்கு மணமகன் தேவை. பதிவெண் - 33395

(CS/51246)AH-I

தொடர்புகளுக்கு- S.Sharma J.P Astrologer
Phone - 077 539 3728
Whatsapp - 077 803 8193

## வேலையாள்கள் தேவை

யாழ்நகரில் இயங்கும் வியாபார நிறுவனம் ஒன்றிற்கு ஆண், பெண் இருபாலாரும் தேவை.

* விற்பனையாளர்
* தரவு பதிவாளர்
* சிட்டை எழுதுனர்
* கூலியாள்

தொடர்பு: **077 336 4166**

(cs 51251) (N.1)

## வேலையாள்கள் தேவை

யாழ். நகரில் உள்ள நிறுவனம் ஒன்றிற்கு மின்னியலாளர் (Electrcian), மின் ஒட்டுனர்(Welder) தேவை. அனுபவமுள்ளவர்கள் விரும்பத்தக்கது.

**077 9590 793**

## புளியம் மரங்கள் விற்பனைக்கு

நன்கு வளர்ந்த இரண்டு புளியம் மரங்கள் விற்பனைக்குண்டு.
தேவையானோர் தொடர்புகொள்ளவும்.

தொடர்பு:- 071 411 5000

## மேல் மாடி வீடு விற்பனைக்கு

✓யாழ். மானிப்பாயில் 2 பரப்பில் அமைந்த லக்சறி வீடு (மேல்மாடி) சகல தளபாட வசதிகளுடன் விற்பனைக்குண்டு.
✓4 பரப்புக் காணியும் விற்பனைக்குண்டு.

**077 102 2763**

## வீடும் காணியும் விற்பனைக்கு

யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரிக்கு அருகில் கல்லூரி ஒழுங்கையில் 3 பரப்பும் 11 குளியும் உள்ள காணியும் வீடும் விற்பனைக்கு உண்டு. (CS 5181)(A-1)

தொடர்பு: 077 558 9110
வட்ஸ்அப்: + 447802425456

## காணி விற்பனைக்குண்டு

* யாழ்ப்பாணம் கைதடியில் பிள்ளையார் கோவிலுக்கு அருகாமையில் 3 பரப்புக் காணி விற்பனைக்குண்டு.
* A9 வீதியில் இருந்து இரண்டாவது காணி.

தொடர்புகளுக்கு:
**076 788 0591**
**076 739 0413**

(CS 25530) A-1

## மரண அறிவித்தல்



பிறப்பு 10 . 01 . 1961

இறப்பு 10 . 07 . 2023

### திருமதி சுப்பிரமணியம் அரியராணி
(ஸ்தாபகர் முத்துக்குமரன் சுப்பர் மார்கெட் - கைதடிச் சந்தி, கைதடி)

யாழ். கைதடியைப் பிறப்பிடமாகவும், கொழும்பை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சுப்பிரமணியம் அரியராணி 10-07-2023 திங்கட்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம் நாகேஸ்வரி தம்பதிகளின் சிரேஷ்ட புதல்வியும், காலஞ்சென்றவர்களான நாகலிங்கம் அன்னப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மருமகளும்,காலஞ்சென்ற சுப்பிரமணியம் அவர்களின் அன்பு மனைவியும், லக்ஸ்ஷனி, அதீசன், பவதீசன் ஆகியோரின் பாசமிகு தாயாரும், சுதர்சன், சுவித்தா ஆகியோரின் பாசமிகு மாமியாரும், அரியமலர், அப்பாப்பிள்ளை, அரியசோதி, அரியசுசி, அசோக்குமார் ஆகியோரின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்றவர்களான முத்துக்குமாரசுவாமி, அன்னம்மா, சிங்கராஜா மற்றும் சிவலிங்கராஜா, பரமேஸ்வரி, காலஞ்சென்ற இலங்காதேவி மற்றும் புஸ்பராணி, சரோஜினி தேவி, மகாலிங்கம் ஆகியோரின் அன்பு மைத்துனியும், பிரதீஸ், டறீஸ், தக்ஷரா, அன்ஷிதா ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் B24 1/3 NHS Flats Maligawatta Colombo- 10 எனும் முகவரியில் உள்ள அவரது இல்லத்தில் நாளை (16-07-2023) ஞாயிற்றுக்கிழமை மு.ப 10.00 மணியளவில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக பொரளை இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கைதடி தெற்கு,
கைதடி.

தகவல்:
குடும்பத்தினர்

(cs51241) (N-1)

அம்பன், குடத்தனையில்

## இம்முறை 100 ஏக்கரில் வெங்காயச் செய்கை

குடாநாட்டில் வடமராட்சி கிழக்கு அம்பன், குடத்தனைப் பகுதிகளில் இம்முறை 100 ஏக்கரில் வெங்காயச் செய்கை விவசாயிகளால் மேற்கொள்ளப்படுகிறது என விவசாயத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

வருடாந்தம் ஜூன், ஜூலை ஆகிய மாதங்களில் இங்கு வெங்காயப்பயிர்ச்செய்கை மேற்கொள்ளப்படும். தற்போது வழமையான காலங்களைவிடவும் இம்முறை அதிக ஏக்கரில் வெங்காயம் பயிரிடப்பட்டுள்ளது. குறித்த பிரதேசங்கள் மட்டுமின்றி பருத்தித்துறை, மந்திகை, தம்பசிட்டி உட்பட்டப் பல பிரதேசங்களில் பரவலாக விவசாயிகள் வெங்காயச் செய்கையில் ஈடுபட்டுள்ளனர். அதேவேளை அம்பன், குத்தனை வெங்காயத்துக்கு யாழ்ப்பாணத்தில் கேள்வி மற்றும் விலை அதிகம் என்பது குறிப்பிடத்தக்கது.

(ச-ரி3-27)

## நுங்கு விற்பனை புங்குடுதீவில் சூடு

புங்குடுதீவில் நுங்கு விற்பனை சூடுபிடித்துக் காணப்படுகிறது. தற்போது அதிகரித்துக் காணப்படும் வெப்பநிலை காரணமாக உடல் சூட்டைத் தணிப்பதற்காக பலரும் நுங்கை ஆர்வத்துடன் கொள்வனவு செய்து வருகின்றனர். அத்துடன் நயினாதீவு மற்றும் நெடுந்தீவு செல்லும் சுற்றுலாப் பயணிகள் அதிகளவில் நுங்கை கொள்வனவு செய்வதை அவதானிக்க முடிகின்றது. ஒரு நுங்கு 250 ரூபா வரையும் பனம்பழம் 300 ரூபாவரையும் விற்பனை செய்யப்படுகின்றன. (ச-ரி-125)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 15.07.2023 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.